# ஞானச்சுடர்






ஆடி 2023

307ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்**
**துன்பத்துள் துன்பங் கெடின்.**

**பொருள் :** ஆசையை விட்டொழித்தால் ஒருவன் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுவான்.

(369)

**ஆராவியற்கை யவா நீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.**

**பொருள் :** ஒருகாலும் நிரம்பாத இயல்புடைய ஆசையை ஒருவன் விட்டால், அது அவனுக்கு எப்பொழுதும் மாறாத இயல்புடைய இன்பத்தைக் கொடுக்கும்.

(370)

---

## நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**நிகரில்லாத இன்பம் நிறையுமே**



ஔவனத் தில்லையில் ஆடல் உகந்தவன்
நவ்வியைப் பாகம் வைத்த நம்பனே 11

அஃகுத லில்லா அறிவினை யுடையவன்
நஃகும் நம்வஞ்ச வேடங் கண்டே 12

கட்டுப் படாத மனத்தைக் கட்டினால்
எட்டுணை யேனும் இடுக்கண் இல்லையே 13

ஙகரம் போல நாங்கள் வாழ்ந்தால்
நிகரில் லாத இன்பம் நிறையுமே 14

சந்ததம் சாதனை தவறாது செய்யின்
சிந்தூர முரித்த சிவனடி சேர்வோம் 15

ஞான யோகம் நாங்கள் புரிந்தால்
மோனவீ டடைவோம் முழுது முண்மையே 16

இடத்து மடந்தையை வைத்த பெருமான்
நடத்தைக் கண்டால் நாமுய்ந் தோமே 17

அணங்கு தந்தெமை ஆட்டும் மனத்தை
இணங்காம லெந்தை யிணையடி பணிகுதும் 18

தன்னைத் தன்னா லறிந்த ஞானிகள்
விண்ணில் விளங்கும் வெய்யவன் போல்வார் 19

நன்றுதீ தென்று நாடாமல் நாடினால்
குன்றின்மேல் வைத்த விளக்கின் கொள்கையே 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 307



**2023 பொருளடக்கம் ஆடி**


| | | |
|---|---|---|
| அன்பான மக்களே... | பு. கதிரித்தம்பி | 01 - 02 |
| ஆண்டவன் போட்ட... | கே.எஸ். சிவஞானராஜா | - 03 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 04 - 05 |
| எங்கே போகிறோம்? | யூ.பி. ஆனந்தம் | - 06 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 07 - 10 |
| முருக இலக்கியங்கள் | முருகவே பரமநாதன் | 11 - 14 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 15 - 16 |
| ஈழத்தின் தொன்மை... | ச. சஜீலன் | 17 - 21 |
| எமது மதம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 22 - 23 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 - 27 |
| திருமூலர் சத்திநிபாதம்... | கு. சிவபாலராஜா | 28 - 33 |
| தமிழ்ப் பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 34 - 38 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தினால்... | தொகுப்பு | 39 - 48 |


**வருட சந்தா: 500/= (தபால் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 306ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றுவதற்குரியவர் வருகை தராத காரணத்தால் ஆச்சிரம சுவாமி அவர்களே அவ் உரையினை நிகழ்த்தினார்.

அவர் ஆற்றிய உரையின்மூலம் இம் மலர் சம்பந்தமாக பல காத்திரமான விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது. குறிப்பாக நாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்த காலங்களில்கூட காகிதாதிகள் தட்டுப்பாடாக இருந்த காலத்திலும் இம் மலரானது தொடராக வெளிவருவதற்கு மூலகாரணமாக சந்நிதி வேலவனது பேரருளும், மறைந்த முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் குடும்பத்தினரின் விடாமுயற்சியும் மலர் வெளிவர ஒரு காரணமாக இருந்தது. அதற்குக் காரணம் அவர்களது கப்பல்மூலம் காகிதாதிகளை அனுப்பியது என்றும் மறக்கமுடியாத ஒரு சம்பவம். அத்துடன் தொடராக இம் மலரை பெற்றுக்கொள்ளும் அன்பர்களின் எண்ணிக்கையையும் அதிகமாக இருந்ததும் ஒரு காரணம் என்று கூறி, இம் மலர் வெளிவருவதனூடாக தான்பெற்ற அனுபவங்களையும் சபையில் வீற்றிருந்த அடியவர்களுக்கு விளக்கிக்கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் ஆனி மாத மலருக்குரிய (306ஆவது) மதிப்பீட்டுரையினை ஆசிரியரும், சைவப்புலவரும், பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளருமாகிய திரு க. கைலநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

குறிப்பாக அவர் கூறிய விடயம் இம் மலர் வெளியீடு சம்பந்தமாக சுவாமி கூறிய கருத்துக்கள் எம்மைப் பிரமிக்க வைக்கின்றது. உண்மையில் ஒரு மலரை வெளியிடுவதற்கே நாம் எவ்வளவு சிரமப்படுகின்றோம். 306ஆவது ஞானச்சுடர் மலர் அதுவும் ஒரு ஆன்மீகம் சார்ந்த மலர் எவ்வகையான விளம்பரங்களும் அற்ற நிலையிலும் வெளிவருவது என்பது சுவாமிகள் கூறிய கூற்றுக்கு அமைவாகவே காணக்கூடியதாக இருக்கின்றது என்று கூறி தனது மதிப்பீட்டுரையை ஆரம்பித்தார்.

மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதுடன் ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு விதத்தில் இம் மலரின் மதிப்பீட்டுரையில் பங்குபற்றுவதுடன் ஆச்சிரமம் ஆற்றும் பல பணிகளுக்கும் தன்னை ஈடுபட வைத்த சந்நிதி வேலவனுக்கும், ஆச்சிரம சுவாமி அவர்களுக்கும் நன்றி கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

## குரு வார்த்தை

எமது சமய வாழ்வியலில் குரு வார்த்தை பல ஆன்மாக்களை ஈடேறச் செய்துள்ளது. குருமார்களின் வார்த்தையை சிரமேற்கொண்டு வாழ்நாள் முழுவதும் ஆன்மீக ஈடேற்றத்தை அடைந்த ஞானிகள் எமது சூழலிலும் வாழ்ந்துள்ளனர்.

இவ்வகையில் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு அடியெடுத்துக்கொடுத்தவர் ஆனந்தா ஆச்சிரமத்தின் ஸ்தாபகரான முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளாவார். மயில்வாகனம் சுவாமி அவர்கள் சந்நிதி சூழலில் 1940ஆம் ஆண்டு ஆனந்தாச்சிரமத்தை அமைத்து, வருகின்ற அடியார்களை முருகனே வருகின்றான் என நினைந்து அன்னமளித்து நிறைவு கண்டவராவார். அவர் 1985ஆம் ஆண்டு தேகத்தை விடும்வரை அன்னதானப் பணியையே அறப்பணியாக மேற்கொண்டவராவார்.



இந்தியாவில் ஆன்மீகத்தின் ஆளுமையாக விளங்கிய ரமணமகரிஷியை ஈழத்தில் இருந்து மயில்வாகனம் சுவாமி அவர்களும் செல்லத்துரை சுவாமி அவர்களும் முற்பிறப்பின் தவப்பேறாக தரிசித்தபோது இவர்களுக்கான கடமையை உணர்ந்து கொண்டார். "நான் யார்?" என்பதை ஆன்மீக விசாரணையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதும் மயில்வாகனம் சுவாமியை அன்னதானப் பணியை செய் என்றும் செல்லத்துரை சுவாமிகளை சிவ தொண்டன் நிலையத்திற்கும் வழிப்படுத்தியமை ரமண மகரிஷியின் தீர்க்கதரிசனமேயாகும்.

இவ்வகையில் குரு வார்த்தையை சிரமேற்கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் அன்னதானப் பணியை மேற்கொண்டது மட்டுமன்றி குருவருளால் மோகனதாஸ் சுவாமிகளை சீடனாக வளர்த்து தனது பண்பை, பணியை அவரிடம் ஒப்படைத்தது மட்டுமன்றி அவர் மூலமாக தமிழ் கூறும் சைவ உலகத்திற்கு அன்னதானப் பணி மட்டுமன்றி சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, மருத்துவப்பணி என எல்லாவற்றையும் அனைவராலும் பிரமிக்கத்தக்க வகையில் செய்வதற்கு வழிவகுத்தமையே என்பதை குரு வார்த்தையின் மேன்மையை மயில்வாகனம் சுவாமியின் 38ஆவது குருபூசைத் தினத்தில் நினைவு கூருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**17.08.2023 வியாழக்கிழமை 2ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்கள்

**18.08.2023 வெள்ளிக்கிழமை 3ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கோலமா மஞ்ஞை"

வழங்குபவர் :- திரு T. கருணாகரன் அவர்கள்

**19.08.2023 சனிக்கிழமை 4ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஞானக்குழந்தை"

வழங்குபவர் :- திரு க. கைலநாதன் அவர்கள் (சைவப்புலவர்)

**20.08.2023 ஞாயிற்றுக்கிழமை 5ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"

வழங்குபவர் :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் (அதிபர்)

**21.08.2023 திங்கட்கிழமை 6ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உதித்தனன் உலகம் உய்ய"

வழங்குபவர் :- திரு S.T. குமரன் அவர்கள் (சைவப்புலவர்)

**22.08.2023 செவ்வாய்க்கிழமை 7ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

வழங்குபவர் :- திரு பொன். சந்திரவேல் அவர்கள்

**23.08.2023 புதன்கிழமை 8ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "குருவாய் வருவாய்"

வழங்குபவர் :- திரு நி. பாபுதரன் அவர்கள் (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24.08.2023 வியாழக்கிழமை 9ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆற்றங்கரை வேலன்"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(அதிபர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

**25.08.2023 வெள்ளிக்கிழமை 10ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆடும் பரிவேல்"

வழங்குபவர் :- திரு இரா செல்வவடிவேல் அவர்கள் (பூங்காவனம்)

(ஆசிரியர்)

**26.08.2023 சனிக்கிழமை 11ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகன் திருவருள்"

வழங்குபவர் :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(இளை. ஆசிரியர்)

**27.08.2023 ஞாயிற்றுக்கிழமை 12ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அருணகிரியை ஆட்கொண்ட வேலவன்"

வழங்குபவர் :- திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

(சைவப்புலவர்)

**28.08.2023 திங்கட்கிழமை 13ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கால் பட்டழிந்தது"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(இளை. அதிபர்)

**29.08.2023 செவ்வாய்கிழமை 14ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கொற்றவேல்"

வழங்குபவர் :- திரு செ. கந்த சத்தியதாசன் அவர்கள் (சப்பறம்)

(சைவப்புலவர்)

**30.08.2023 புதன்கிழமை தேர்**

**31.08.2023 வியாழக்கிழமை தீர்த்தம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி மாதத் திருப்பணி அனுசரணையாளர்கள்

ந. ஜவகர்லால்நேரு
(லண்டன்)
K. கனகசபேசன்
(கனடா)
செல்வி தம்பு சரோஜா
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
இ. பேரின்பநாயகன்
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)
Dr. V. ஸ்ரீஸ்காந்தன்
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)
கி. கனகரெட்ணம்
(வல்வெட்டி)
வே. பாராளன்
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)
S. தர்மரெத்தினம்
(அதிபர், சிறுப்பிட்டி)
ச. நவரத்தினராசவேல்
(அதிபர், வேல்பதி, புத்தூர்)
நா. இராசலிங்கம்
(இளை. அத்தியட்சகர்)
திருமதி கலாநிதி முரளிதரன்
(யாழ்ப்பாணம்)
ந. சேகர்
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)
கு. ஸ்ரீமுருகமூர்த்தி
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
சு.பொ. நடராசா
(அண்ணா தொழிலகம், இணுவில்)
த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
செ. ஈஸ்வரன்
(சித்தங்கேணி)
சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
பாலசுப்பிரமணியன் ராகுலன்
(யாழ்ப்பாணம்)
ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி மாலதி இராஜேஸ்வரன்
(உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. திருஞானசம்பந்தர்**
(ஏழாலை வடக்கு)
**புஸ்பநாதன் பிரதீபன்**
(உரும்பராய் வடக்கு)
**க. குணசிங்கம்**
(சாவகச்சேரி)
**இ. சிவஞானம் J.P**
(புத்தூர்)
**N. குலசேகரம்**
(வருணன், அச்சுவேலி)
**க.ம. செல்வரெத்தினம்**
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
**சி. தனபாலசிங்கம்**
(புலோலி)
**ஆ. குலசிங்கம்**
(இணுவில்)
**சிதம்பரப்பிள்ளை அனுஜா**
(அல்வாய்)
**சி. ராணி**
(அச்சுவேலி)
**திருமதி உ. பேரானந்தம்**
(தெல்லிப்பழை)
**வ. சிவலீலாவதி**
(புத்தூர்)
**க. ஸ்ரீஸ்கந்தராசா**
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
**ந. இராமரூபன்**
(நீர்வேலி)
**மு. இராஜேந்திரன்**
(முருகையா கோவிலடி, புலோலி)
**பொன். சற்குணநாதன்**
(வேம்பன் வீதி, உரும்பராய்)
**சொ. செல்லத்துரை**
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
**நா. தெய்வேந்திரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**வி. தவத்துரைராசா**
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
**செ. முத்துக்குமாரசாமி**
(உடுப்பிட்டி)
**சி. கணேசமூர்த்தி**
(அல்வாய்)
**தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
ச. சிவரூபன்
(சிறுப்பிட்டி)
செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வறங்கம், இணுவில்)
ஆ. மகேந்திரலிங்கம்
(வேம்போலை, இணுவில்)
உரிமையாளர்
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
கணேசலிங்கம் ஞானாமிர்தம்
(குப்பிளான்)
செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்
(யாழ்ப்பாணம்)
ஜெ. கலைச்செல்வி
(கோப்பாய்)
செ. வாமதேவன்
(இணுவில் மேற்கு, இணுவில்)
V. சேனாதிராசா
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
பிறேமதாஸ் சசிகலா
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
செல்வி தர்மினி ரவிச்சந்திரன்
(கட்டுடை, மானிப்பாய்)
க. சிவஞானசுந்தரம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
திருமதி பொ. இரத்தினசோதி
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
ச. கிருஷ்ணமூர்த்தி
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
செ. அட்செயலிங்கம்
(ஆசிரியர், அல்வாய்)
மூ.சிவலிங்கம்
(காரைக்கால் வீதி, இணுவில்)
க. விகர்ணன்
(குமரகோட்டம், கோண்டாவில்)
R. பொன்னுராசா
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
S. தர்மலிங்கம்
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
சி. குகநாதன்
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான மக்களே எமக்கு சமயச் சண்டை வேண்டாம்

– *திரு பு. கதிரித்தம்பி* அவர்கள் –

எல்லாச் சமயங்களும் இறைவன் ஒருவனையே கூறுகின்றன. வெவ்வேறு பெயர்களால் இறைவனை அழைக்கின்றனர். சைவசமயம் இறைவன் ஒன்றே என்று கூறுகின்றது. ஆனால் இறைவன் நாமங்கள் ஏராளமாக இருப்பதினால், அன்பர்கள் தமக்கு விரும்பிய நாமத்தால் இறைவனை அழைக்கின்றனர். என்ன நாமம் சொல்லி அழைத்தாலும், அவன் அன்பர்களுக்கு ஓடோடி வந்து அருள்புரியும் அற்புதக் கடவுளாவார். எனவே அன்பான மானுடப்பிறவி எடுத்த மனிதர்களே எமது சமயம் உமது சமயம் என்று வீண் சண்டைசெய்யாது, எல்லோருடனும் அன்பாக வாழப்பழகிக்கொள்ளுங்கள். எல்லாக் கிளை நதிகளும் கடைசியில் கடலையே சென்று அடைகின்றன. அதுபோல எல்லாச் சமயங்களும் கடைசியில் இறைவன் அடி சேர்கின்ற உண்மையை நன்கு உணருங்கள். இறைவன் எல்லா உயிரினங்களிலும் அன்பூண்டு இருப்பது போல், மனிதராகிய நாமும் எல்லா மக்களும் நம்மக்கள் என எண்ணி, அன்பாகப் பேசி சந்தோஷமாக வாழுங்கள்.

சமயத்தின் கருப்பொருளை உணராத சிலர், சுயநலத்துக்காக ஏழை மக்களை தூண்டி சமயக்கலவரங்களை ஏற்படுத்துகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன் மேற்குலக நாடுகளில் சமயச்சண்டை ஏற்பட்டு, மக்கள் பலர் மடிந்து இரத்த ஆறு ஓடியதை சரித்திரம் எடுத்துக் கூறுகின்றது. சமயச் சண்டையை நன்குணர்ந்த அறிஞர்களும், பெரியோர்களும், சமயக் கோட்பாடுகளை மக்களுக்கு உணர்த்தி, போரைத் தொடர்ந்து செல்லாது தடுத்து நிறுத்தினர். மக்களும் போரினால் ஏற்பட்ட துன்பங்களையும், அழிவுகளையும் எண்ணி மனம் கலங்கி வீண் சண்டையென உணரத்தலைப்பட்டனர். அராபிய நாடுகளிலும் இது போன்ற சண்டைகள் ஏற்பட்டு அழிந்த சொத்துக்களையும், இறந்தவர்களையும் எண்ணி கலக்கமடைந்து, சமயத்தின் கருப்பொருள்களையும் ஆராய்ந்து, சமயத்தில் கூறப்பட்டிருக்கும் வழிகளில் ஒழுகலாயினர். இதுபோல் இந்தியாவிலும் சமண சமயத்தவர்களும் சைவ சமயத்தவர்களும் அனல்வாதம், புனல் வாத சமர் ஏற்பட்டு, இறையருள் பெற்ற திருஞானசம்பந்தர் இரு சமரிலும் வெற்றி பெற்றார். இறை பாடல் கொண்ட ஏட்டை தீயில் இட்டு எரியாது இருந்ததையும், ஏடு ஓடும் நீரில் எதிரேறிச் சென்றமையும் சைவத்தின் பெருமையை உலகறியச் செய்தது. இதனால் அரசனும் மக்களும் சமயம் மாறி சைவசமயத்தில் இணைந்தனர். சமயச்சண்டை இறைவனுக்குச் செய்யும் பாதகம் என்பதையும் மக்கள் உணரத்தொடங்கினர்.

இறைவன் ஒருவன் எங்கும் வியாபித்து இருக்கின்றான். பல கண்டங்களில் வாழும் மக்களுக்கு சூழலுக்கேற்ப சமயத்தையும் மொழிகளையும் காலநிலைகளையும் கருத்திற்கொண்டு படைத்துள்ளான். உணவு வகைகள், கலை கலாசார விழுமியங்கள் பேணும் வகையில்

*கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை அமைத்துக்கொடுத்துள்ளான். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து, கலாசாரங்களை பழக்கவழக்கங்களை மாறுதல் அடையச் செய்துவிட்டதென்ற உண்மை யாவரும் அறிந்ததாகும் விஞ்ஞான செயற்பாடுகளினால் மக்களிடம் கடவுள் நம்பிக்கை குறையத் தொடங்கிவிட்டது. விஞ்ஞானத்தால் எதையும் செய்யலாமென்ற எண்ணம் மக்கள் மனதில் தோன்றிவிட்டது. சமய ஒழுக்கம் குறையக் குறைய ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்து அமைதியின்மை ஏற்பட்டிருப்பதை மனிதன் உணருகின்றான். ஆனால் விஞ்ஞான நம்பிக்கை கொண்ட மனிதர்களால், உண்மையை உணர்ந்தும் நல்வழிக்கு வர மனம் தடைபோடுகின்றது. இதனால் அவன் இரு தலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கின்றான். இறை வழிபாட்டினால் மட்டும் இடர் களைய முடியும் என்ற எண்ணக்கரு அவன் மனதிலே தோன்றவேண்டும்.

ஆதிகால மக்கள் முழுமையாக இறைவனை நம்பி இருந்தபொழுது, இறைவனும் அருகே வந்து மானுட வடிவில் அருள் செய்தான் என்பது சமயம் கூறும் வேத வாக்காகும். விஞ்ஞானத்தை நம்பி இறைவனை தூர வைத்ததினால், அவர் அருள்காட்சிகளும் அருள்களும் தூரத்தே நிற்கின்றன. இறைவன் யுகங்களையும் படைத்து யுகங்களுக்கு ஏற்ற செயற்பாடுகளையும் செய்யவைக்கின்றான். தற்பொழுது கலியுகம் நடக்கின்றது. கடைசிக் கந்தாயம் காக்கும் கடவுள் நாராயணன் கல்கி வடிவம் தாங்கி அதன் செயற்பாடுகளை செய்துகொண்டிருக்கின்றான். இதனால் நாட்டில் அமைதியின்மை ஏற்படும். அரசியல் குழப்பங்கள் ஏற்படும், காலமாற்றங்கள் ஏற்படும் ஒழுக்கக்கேடுகள் நிகழும், நாட்டில் அமைதியின்மை தோன்றும். இதனை நீக்கவேண்டுமாயின் அன்பான மக்களே கலியுகவரதன் செல்வச்சந்நிதியான் ஆலயத்திற்குச் சென்று நீரோடையில் மூழ்கி அவன் விபூதியை உடம்பெங்கும் பூசி முன்வினையை நீக்கிக் கொள்ளுங்கள். அருள் கடவுள் சந்நிதியானும் உங்கள் துயரை நீக்க வேலும் மயிலுடனும் எழுந்தருளி இருக்கின்றார். அவனை நெஞ்சுருகிப் பாடுங்கள். உங்கள் பாடலைக் கேட்டு மகிழ்ந்து வேண்டிய வரங்களைத் தந்தருளுவான். இவன் அருள் பெற்ற சந்நிதியான் ஆச்சிரம அடியவன் உங்கள் பசியைப் போக்கவும், அறியாமையை களையவும் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சமயக்கருத்தரங்குகளை நடத்துகின்றார். எனவே சமயச் சண்டையை நீக்கி, தத்தம் சமய வழிபாடுகளில் ஈடுபடுங்கள். எல்லாம் அவன் செயல்.

**பொருந்துவன தந்து அருள்புரிவாய் முருகா**

எல்லா வினையும் போய் மறைய வேண்டும்
நல்லோர் உறவே எமக்காகிவிடல் வேண்டும்
இல்லாமை இல்லாது நீங்கிவிடல் வேண்டும்
இருப்பது போதும் என்ற மனநிறைவு வேண்டும்
கல்லாமை நீங்கி கற்று வாழ்ந்திடவும் வேண்டும்
கயவர்கள் உறவு விலகிவிடவும் வேண்டும்
பொல்லா வினையாவும் பொறுத்தருளும் பெருமானே
பொருந்துவன எமக்கருளி அருள்புரிய வேண்டும்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*நிகழ்காலத்தை சரியாக பயன்படுத்திக்கொண்டால் எதிர்காலம் நம்மை வரவேற்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் போட்ட பிச்சைக்கு அநியாயம் செய்தலாகாது

*– திரு கே.எஸ். சிவஞானராஜா* அவர்கள் –

இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவச வைத்தியம், இலவச உணவு, இலவசப் புத்தகங்கள், இலவச உதவிகள், இலவச உயர்கல்வி மற்றும் இலவச வதிவிடங்கள், இலவச மான்மியங்கள், இலவச சலுகைகள் இவ்வாறு எத்தனை எத்தனை வசதிகள், வாய்ப்புக்கள், பாக்கியங்கள், வரங்கள் இலங்கையர்களுக்கு ஆண்டவனால் பிச்சையாக இடப்பட்டபோதும், அதை உணர்ந்து செயற்படுவோர் 35% சதவீதமானோரைத் தவிர, ஏனைய 65% வீதமானோர், இலவசங்களை உதாசீனம் செய்பவர்களாகவும், அல்லாமலும் அவற்றிற்குப் பொறுப்பானவர்கள்கூட அவற்றின் பெறுமதியை உணருமாறு பயனாளிகளை ஊக்குவிக்க முடியாதவர்களாகவும் அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை மலிந்து காணப்படுகின்றனர். இந்த அகால நிலை இன்று நேற்றல்ல சுமார் 25 வருடகாலமாக இலங்கையில் வேருன்றியுள்ளது. அடேயப்பா, 45 இலட்சம் மாணவர்களால் இருபது இலட்சம் ஊழியர்கள் இறைவனின் கருணையினால் போதிய ஊதியத்தை மாதாந்தம் பெறுகிறார்கள். அந்த நிதி இந்த நிதி, அந்த அலவன்ஸ் இந்த அலவன்ஸ், அந்த போனஸ் இந்த போனஸ், அது இது அப்படி இப்பிடி என்று சகல சாம்ராஜ்ஜிய அனுகூலங்களையும் இறைவன் சரியோ பிழையோ இலாபமோ நட்டமோ கண்ணை மூடிக்கொண்டு எல்லோருக்கும் வழங்கி வருகின்றான். இங்கு மாணவர்கள் சிவன் சொத்துக்கள் அதாவது இறைவனுடைய சொத்துக்கள். நாம் வீட்டுக்குப் போக அவர்களே நாட்டை ஆளப்போகின்றார்கள். எனவே மாணவர்கள் எவராகினும் சரி அவர்களது தேவைகளைத் தவம் ஆகும்படியாக ஒவ்வொரு குருவானவரும் வரம் கொடுப்பார் களாயின் அவர்களே நாம் வணங்கும் கடவுளர் ஆவார்கள். அவர்களின் அறிவுப்பசிக்குத் தீனி போடவும் வேண்டும், போடுவதோடு நின்றுவிடாது, போட்ட தீனிக்கு ஏற்ற பரிசையும் காலந்தாழ்த்தாது கொடுக்கவும் வேண்டும். வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் நம்மாலேயே கொடுக்க வேண்டும் என்பதை இறைவன் விழிப்போடு உன்னிப்பாக அவதானித்த வண்ணம் இருக்கின்றான். கல்வி ஒரு பரிசு ஆகும். மாணவர்க்கு பரீட்சை ஒரு பரிசாகும். புள்ளி வழங்குதல் ஒரு பரிசாகும். அது உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வது அவர்களது வாழ்க்கைப் பரிசாகும். மூன்று இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் என்னாலோ எம்மாலோ வீணடிக்கப்படலாகாது. மாணவர்கள் தம் வாழ்வை எண்ணி தினம் தினம் கணம் கணம் தவமிருக்கும்போது நாமோ உண்டு களித்து உறங்கி இலட்சம் பிள்ளைகளைப்பற்றி கொஞ்ச மாவது ஆண்டவனிடம் தொழுது வணங்கி மன்றாடுவோமாக! இரண்டேகால் கோடி மக்களுக்கும் அரசவரி சுமத்தப்பட்டுள்ளது. இத்தனை பேரும் வரிச்சுமையால் வீதியில் இறங்கினால் இலங்கையோ நாறிப்போய்விடும். அத்தனை அடுப்புகளும் அடங்கி ஒடுங்கி அணைந்துவிடும். மலையகம் கருகிவிடும். முழு இலங்கையும் பஞ்சம் பசி பட்டினியால் தவிக்கும். இந்த இக்கட்டான நிலையில் பொறுமை காத்தலே தருமம் ஆகும்.

*சுயமாய் வளர்ந்தவனுக்கு சுயநலமும், கொடியில் படர்ந்தவனுக்கு பொதுநலம் இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

(தொடர்ச்சி...

இறைவனை நம்முடைய கண்களுக்கு புலப்படுகின்ற ஒரு சாதாரணமான பொருளைப் போல், வெளியே பார்க்கமுடியுமா? உள்ளத்தில் உணர்வு மயமான அனுபவத்தில் கண்டு இன்புற வேண்டிய பொருள் என்பதை பாடுகிறார் திருமூலர்.

வானுக்குள் ஈசனை தேடும் மருளர்காள்

(வானுக்குள் - ஆகாசத்தில், மருளர்காள் - அறிவடையா மக்களே)

வானில் இறைவன் இருக்கிறான் என்று எண்ணும் அறியாமையை இப்படிக் கூறுகிறார்.

தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ

தேனுக்குள் தித்திப்பு சிவப்பாக இருக்குமோ அல்லது கறுப்பாக இருக்குமா என்று கண்களால் பார்க்க முடியுமா? அந்த தேனின் இனிப்புக்கு நிறமேது?

தேனுக்குள் இன்பம் சிறந்திருந் தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே.

தேனுக்குள் பரந்து நிற்கும் இனிப்பு என்ற சுவையைப்போல, இந்த ஊனுக்குள் ஒளிந்து நிற்கிறான் இறைவன்.

வானுக்குள் ஈசனை தேடும் மருளர்காள்
தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே.

இந்த அழகான பாடலுடன் திருமூலர் தவமொழியை நிறைவு செய்வோம்.

திருமூலர் நூல் முடிவில் தனது குருநாதராகிய நந்தி பெருமானை வாழ்த்தி வணங்குகிறார். அவர் பாடலின் ஒவ்வொரு அடியிலும் குருவின் திருவடியை வாழ்த்துகிறார்.

வாழ்கவே வாழ்கவென் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்

(மலம் அறுத்தான் - ஆணவம், கன்மம், மாயை என்கிற மாசுக்களை அறுத்தவனாகிய குருவினுடைய பதம் - திருவடி)

வாழ்கவே வாழ்க மெய்ஞ் ஞானத் தவன்தான்

(மெய்ஞ் ஞானத்தவன்- மெய்யான ஞானமே சொருபமாக உள்ள திருமூர்த்தி தாள் - திருவடி)

வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்

(மலம் இலான் - மாசு மறுவில்லாத புண்ணிய மூர்த்தி)

*மற்றவரால் தூக்கி எறியும்போதுதான் தெரிகிறது நம்மால் உயரப்பறக்கமுடியுமென்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கவே வாழ்கவென் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ் ஞானத் தவன்தான்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

தம்முடைய குருவை சிந்தித்து வாழ்த்திய திருமூலரை நாமும் சிந்தித்து இத்தொடரை நிறைவு செய்வோமாக!

திருமூலரின் தவப்பாடல்கள் பற்றிய ஓர் பழைய துதிப்பாடல்

ஐய மாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெல்லாம்

(ஐயமாக்கடல் - சந்தேகம் எனும் பெரும் கடலுக்குள் ஆழ்ந்த உயிர்க்கெல்லாம்- மூழ்கி துயரப்படுகின்ற மனிதர்க்கெல்லாம்)

கையில் ஆமல கம் எனக் காட்டுவான்

(கையில் ஆமலகம் என- உள்ளங்கை நெல்லிக்கனி போல அகத்தை தெளிவோடு காட்டுவான் - உண்மையை விளக்கி காட்டுவதற்காக காட்டுவான்- காட்டுவதற்காக)

மையல் தீர திரு மந்திரம் செப்பிய

(மையல் - மயக்கம் தீர- தீர்த்து வைக்கின்ற திருமந்திரம் - திருமந்திரப் பாடல்களை செப்பிய - மொழிந்த)

செயய் பொன் திரு மூலனைச் சிந்திப்போம்

(செயய் பொன் திருமூலனை - செம்மை பொருந்திய பொன்னான திருமூல முனிவனை சிந்திப்போம் - தியானித்து வணங்குவோமாக.

ஐய மாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெல்லாம்
கையில் ஆமல கம் எனக் காட்டுவான்
மையல் தீர்திரு மந்திரம் செப்பிய
செய்ய பொன் திரு மூலனைச் சிந்திப்போம்.

*ஞானச்சுடர் வாசகர்களுக்கு*

திருமூலரின் மேற்குறிப்பிட்ட திருமந்திரப் பாடல்களுக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த ராஜாஜி - டோமு சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் இலகு நடையில் மக்கள் மனதில் ஆழப்படியும்படி உரை எழுதினார். இந்த பக்தி இரசமான பாடல்களையும் அதன் பொருள் களையும் (கருத்துக்களையும்) ஞானச்சுடர் வாசகர்களும் படித்து உய்யும் வண்ணம் செல்வச்சந்நிதி வேற்பெருமான் அருள்புரிவாராக. ((முற்றும்)

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| *ஆகஸ்ட் 01* | *ஆடி 16* | *செவ்வாய்* | *பட்டினத்தடிகள்* |
| *ஆகஸ்ட் 26* | *ஆவ 09* | *சனி* | *குங்குலியக்கலய நாயனார்* |
| *செப் 11* | *ஆவ 25* | *திங்கள்* | *நீலகண்ட சிவாச்சாரியார்* |
| *செப் 28* | *புர 11* | *வியாழன்* | *கடையிற்சுவாமி* |

*பயத்தையும் தயக்கத்தையும் தூக்கிப்போடுங்கள் வெற்றி உங்கள் காலடியில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போகிறோம்?

– திரு யூ.பி. ஆனந்தம் அவர்கள் –

உலகில் தொன்மை மிக்க சமயமாம் இந்துசமயத்திலே பிறந்து ஆதி மொழியாம் தமிழ்மொழியைத் தாய் மொழியாகவும் கொண்ட நாம் சமயம் கூறும் நல்லொழுக்கங்களைப் பின்பற்றுவதிலும் தமிழ் கூறும் கலாசார விழுமியங்களைக் கடைப்பிடிப்பதிலும் உயர்ந்து விளங்கவேண்டுமல்லவா?

திருநீலகண்ட நாயனார் வழிமாறியதைக் கேள்வியுற்று "எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" எனக் கூறிய வாக்கிற்கமைய ஒரே வீட்டில் பெயரளவில் கணவன் மனைவியாக வாழ்வதை அயலார் கூட அறியாமல் காத்தாள் அவர் மனைவி. ஆனால் தற்போது சிறு அற்ப காரணத்திற்காக விவாகரத்துவரை செல்லும் அல்லது விலகி வாழ்வதை ஊரறியச் செய்து பிறந்த வீடு சென்று வாழும் தற்காலப் பெண்கள் எங்கே?

தாம் செய்த தொண்டுகளை நாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல், நாவுக்கரசர் அன்னதான மடம் என நாயனார் மேலுள்ளதுமான பக்தி மேலோங்க நாயனார் பெயரிலேயே செய்துவந்த அப்பூதியடிகள் வழிகாட்டியவாறு செல்லாது சிறு தானம் செய்தாலும் தமது பெயரைப் பொறித்து தம்பட்டமடிக்கும் கூட்டம்பற்றி என்ன சொல்வது?

பலதாரமணம் அனுமதிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த அருச்சுனன் அஞ்ஞாதவாச காலப்பகுதியில் குருவாக இருந்ததைக் காரணங்காட்டி குரு தந்தைக்குச் சமம் என விராடதேச இளவரசியை மணக்க மறுத்த அருச்சுனன் வழிகாட்டியதை விடுத்து ஆசிரியர்கள் தமது மாணவிகள்மீது பாலியல் வன்புணர்வுறுத்தி அச்சம் கொள்ளவைக்கும் நமது ஆசிரிய சமுதாயம்பற்றி நினைக்கவே அருவருப்பாகிறது.

தம்மை வாள்கொண்டு தாக்கியவரையே பாதுகாப்பாக ஊர் எல்லைவரை கூட்டிச்சென்று விட்டுவிட்டு வருமாறு கூறி வழிகாட்டிய நாயனார் வழி நடக்காது, எதிர்த்து நியாயம் கதைப்பதா? உடனே வாள்வெட்டு என்னும் காலம் இது.

பாரதத்தில் சகோதரர்களை சொத்துக்காகப் பகைத்து அழிந்ததையும், இராமாயணத்தில் அண்ணன் காடு செல்ல, தம்பி அவன் பாதுகையை வைத்து அரசாண்டு வாழ்வுபெற்ற கதையையும் அறிந்திருந்தும் ஓரடி நிலத்திற்காக ஒருவருக்கொருவர் பகைத்து அழிவைத் தேடுவதையல்லவா செய்கிறார்கள்.

பூசலார் நாயனார் மனதில் மானசீகமாகக் கட்டிய கோவிலையே ஆண்டவன் விரும்பி குடிபுக வந்த கதை அறிந்தும் பல ஆலயங்களைக் கட்டி அங்குகூட இறைவனை அமைதியாக அமர்ந்து அருள்புரியவிடாது போட்டி பொறாமை கொண்டு பதவிக்காக அடிபடுகிறார்கள். ஆன்மா லயப்படும் ஆலயங்கள் ஆன்மாக்கள் அடிபடும் இடமாக மாறியிருக்கின்றன.

பூம்பாவைக்கு உயிர் கொடுத்தமையால் தந்தை ஆகிறேன், அதனால் அவளை மணஞ்செய்வது முறை அற்றது என்று கூறிய ஞானசம்பந்தர் காட்டிய வழி எங்கே? தந்தை மகள்மீது பாலியல் வன்புணர்வு தந்தை கைது எனும் நிலைமையிலிருக்கும் எம் மக்கள் எங்கே? கலியுகம் என்பதன் கேட்டையறிய காலந்தான் பதில் சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த சாகரம்

(தொடர்ச்சி....

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## திருக்கல்யாணம்

மலையரசன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை இறைவன் உலகறியத் தீவேட்டுத் திருமணம் புரிந்தான். இந்தத் திருக்கல்யாணத்தை ஆண்டாண்டுதோறும் நம்முடைய ஆலயங்களிலே கொண்டாடுகிறோம்.

இறைவன் சிவனும், சக்தியுமாய் நின்று உயிர்களை இயக்காவிடில்; உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் இன்பம் துய்க்கமாட்டா. அம்மையை எம்பெருமான் தீ முன்னிலையில் சடங்குகள் பல இயற்றித் திருமணம் புரிந்தனன். உலகத்தவர்கள் அறியும் வண்ணம் இங்ஙனம் செய்தருளியது உலகோர் பொருட்டேயாகும். திருமணம் தவத்தால் பெறும் திருவருள் வாழ்வு. திருமணம் திருவடிப்பேறெய்துவதற்குச் செந்தமிழ்ச் சைவநெறி காட்டும் வழி. பார்வதி தவம் புரிந்து திருமணம் புரிந்து நமக்கு வழிகாட்டினாள்.

கணவனுக்கு செம்பாதியாகத் திகழ்பவள் மனைவி. கணவனும் மனைவியும் இயைந்து வாழவேண்டும் என்பதற்காகவே இறைவன் திருமணத்தை விதித்தருளினான். திருமணத்தை விதித்தருளிய இறைவன் தாமும் திருமணம்செய்துகொண்டு நமக்கு நல்வழிகாட்டித் தெளிவும் தருகிறான். இறைவன் தீ முன்னிலையில் திருமணம் செய்து காட்டியிராவிட்டால் உலகமே மணம் புரிந்து மனையறம் புரந்து நன்னெறித்தவ ஒழுக்கம் கைக்கொள்ளாது.

திருக்கல்யாணம், திருப்பள்ளியறை முதலிய விழாக்களால் அம்மைக்கும், அப்பனுக்கும் உள்ள உறவு கணவன் மனைவி போன்றதன்று. காமநுகர்ச்சி இல்லாத இறைவன் உலகில் இல்வாழ்க்கை நடாத்தற்கு நடித்துக் காட்டும் நடிப்பே இறைவன் திருக்கல்யாணம். நம்முடைய திருமணம் திருவடி சேர்ப்பிக்கும் வாயில். இறைவன் திருவுளக் குறிப்பு ஆண், பெண் எனக் குறித்திராவிடின் உலகமே இல்லாதொழிந்துவிடும்.

## தெய்வயானை அம்மை திருமணம்

இந்திரன் தேவர்களுடன் வந்து முருகப்பெருமானுடைய திருவடிகளிலே மலர்களைத் தூவி வணங்கித் துதித்து, "எம்பிரானே! தேவரீர் அசுரர்களை அழித்து தேவர்களைச் சிறைமீட்டு, தமியேனுக்குப் பழைய சுவர்க்க உலக பாக்கியத்தைத் தந்தருளினீர். அதற்குக் கைம்மாறாக தமியேன் மகள் தெய்வயானை திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கின்றாள். அவளைத் தேவரீர் திருமணம் செய்தருள வேண்டும்" என வேண்டினான்.

"ஆம், உன் மகள் நம்மை மணஞ்செய்யத் தவஞ்செய்துள்ளாள். நாளை நீ கருதியபடியே அவளை மணஞ்செய்வோம்" என முருகப்பெருமான் அருளினார். அதனைக் கேட்ட இந்திரன் ஆனந்தம் மேலிட, தன் தூதுவர்களை நோக்கி "திருக்கைலாச வாசியாகிய முசுகுந்தச்

*போராடும் மனிதர்களிடத்தில் தோல்வியும் ஒருநாள் தோற்றுப்போகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தி முதலாகிய பூவுலக அரசர்களுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மற்ற இடங்களிலுள்ளவர்களுக்கும் எம்பெருமான் சுப்பிரமணியப்பெருமானின் திருமணம் நாளை நிகழ இருக்கின்றது எனச் சொல்லி யாவரையும் திருப்பரங்குன்றத்திற்கு அழைத்து வருதீர்" என்று பணித்தான். அவ்வாறே தூதுவர்கள் எல்லாருக்கும் திருமணச்செய்தியை சொன்னார்கள்.

திருமணச்சாலையை விசுவகர்மன் என்ற தேவ தச்சன் அழகுபெற மண்டபம் ஒன்றினை அமைத்து, பலவித அலங்காரங்களுடன் மண்டபத்தின் நடுவிலே முருகப்பெருமானுக்கு ஆசனமும் அமைத்தான். விஷ்ணு, பிரம்மா, முதலிய தேவர்களும் பிறரும் இருத்தற்கு ஆசனங்களையும் அமைத்தான். திருமணத்தைக் கண்டுகளிக்க எல்லாரும் வருகின்றார்கள்.

கையிலார் கைகள் பெற்றும் காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்றும் மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருடரானோர் வாள்விழி பெற்றும் சென்றார்
ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்கு அனையதோ அரிதுமாதோ.

திருக்கல்யாணத்துக்கு வருகின்றவர்களுள் கையிலார், கால் முதலிய அவயவங்கள் இல்லாதவர்கள் அவற்றைப் பெற்றும், ஊமைகள் பேசப்பெற்றும், குருடர்கள் கண்களைப் பெற்றும், வலிமை இல்லாதவர் வலிமைபெற்றும், முருகப்பெருமானது திருவருள் பெருகுகின்றது.

தெய்வப் பெண்கள் தெய்வயானை அம்மையின் பக்கத்தில் வந்து, "சூரபன்மனுடைய உயிரைக் கவர்ந்த வேலாயுதப் பெருமான், ஆறுமுகப் பெருமானுக்கு மனைவியாகப் போகிறாய். ஆதலால் எங்களுக்கும் இறைவியாவாய்" எனக் கூறி அம்மையாருடைய பாதங்களை வணங்கி அம்மையாருக்கு அலங்காரம் செய்தார்கள்.

வீரவாகு முதலிய வீரர்கள், பூதர்கள், தேவர்கள் எல்லாரும் துதிக்க திருமணச்சாலையின் முன் முருகப்பெருமான் வந்தருளினார். சிவபெருமானும் பூதகணம் புடைசூழ உமாதேவியாரோடு விமானத்தில் எழுந்தருளினார். அம்மையையும் அப்பனையும் கண்டு களிப்புற்றார் கந்தவேள். மங்கையை மணச்சாலைக்கு அழைத்து வருகின்றான் இந்திரன். மணமகனையும், மணமகளையும், உமாதேவியார் உயர்ந்த இரத்தின சிங்காசனத்தின்மீது ஏற்றி வைத்தார். இந்திரன் இருவரின் மணக்கோலத்தையும் கண்டு, மதுவுண்ட வண்டுபோல் உள்ளம் குளிர்ந்து, வணங்கி, திருவடியைப் புனித நீராட்டி, அகிற்புகையைக் காட்டி, ஆராதனை செய்து, தூப தீபங்களை ஏற்றிப் பூசனை புரிந்தான். ஆறுமுகப்பெருமானுடைய திருக்கரத்திலே, அருமைத் திருமகளாம் தெய்வயானை அம்மையாருடைய திருக்கரத்தை வைத்து, "தமியேன் இவளை உமக்குத் திருமணம் செய்து தந்தேன்" என்று வேத மந்திரத்தோடு நீரை விடுத்துத் தத்தம் செய்தான்.

முருகப்பெருமான் அதனை ஏற்று அருளினார். பிரமதேவர் தன் கரத்தினால் ஆக்கி அளித்த திருமங்கல நாணை முருகவேள் தன் திருக்கரத்தினால் வாங்கி தெய்வயானையின் திருக்கழுத்தில் அணிந்தார். திருமுடியில் நறுமலர் மாலையும் சூட்டினார். தெய்வயானை அம்மையாருடன் சிவாக்கினியை வலஞ்செய்து, அவருடைய பாதத்தை அம்மியில் தூக்கி வைத்து அருந்ததி தரிசனமும் காட்டி அருளினார்.

*விழுந்தால் எழுவேன் என்ற நம்பிக்கையிருக்க வேண்டும். யாரையும் நம்பி ஏமாறக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணச் சடங்குகள் நிறைவடைந்தவுடன் கந்தப்பெருமான் தெய்வயானை அம்மையுடன் சிவனையும் உமையம்மையையும் மூன்றுமுறை வலம் வந்து வணங்கினார். அன்னையும், அப்பனும் மகனையும் மருமகளையும் அன்போடு எடுத்தணைத்து அருள்செய்து, "உமக்கு எமது முதன்மைப் பதவி தந்தோம்" என்று சொல்லி அருள்கின்றார்கள். சுப்பிரமணியப் பெருமானையும், தெய்வயானை அம்மையாரையும் முறைப்படி எல்லாரும் வழிபாடு செய்து தத்தம் இருப்பிடம் செல்கிறார்கள். அம்மை அப்பரும் பரிசனங்களோடு மறைந்தருளினர்.

தெய்வயானை கற்புமணத்தால் பெற்ற பெருமாட்டி, களவு மணத்தால் பெற்ற தேவி வள்ளி எம்பிராட்டி. முருகப்பெருமான் இருவரையும் மணம்புரிந்து கற்பொழுக்கம், களவொழுக்கம் இரண்டையும் இரண்டு தேவியர்பால் காட்டினான். நாம் பார்த்து மகிழவேண்டும் என்பதற்காக தெய்வயானை அம்மையாரைத் தன் அருகிலேயே வைத்துக்கொண்டார்.

கல்யாண வைபோகமே தெய்வயானை கல்யாண வைபோகமே
திருமுருகன் தெய்வயானை கல்யாண வைபோகமே
திருப்பரங்குன்றத்திலே தேன் தமிழ் மன்றத்திலே கல்யாண வைபோகமே
தேவாதி தேவருடன் மந்திராதி வேதியர்கள் வந்தாரே
வாழ்த்துரைக்க வந்தோர்கள் களித்திருக்க
(கல்யாண வைபோகமே)

மங்கல மண இசையும் முழங்க வாசல்
மாவிலையும் வாழைகளும் குலுங்க
மங்கை தெய்வயானை மணமேடை அமர
உடன் வேலவனும் கோலமுடன் அமர
(கல்யாண வைபோகமே)

உமையவளும் சிவனாரும் மகிழ்ந்தே வாழ்த்த
ஒப்பில்லாத் தேவர்களும் முனிவர்களும் போற்ற
இமை மூடாநிலையினிலே இவ்வுலகோர் காண
எந்தையவன் மாலைதனை பூங்கொடியாள் சூட

காதலுடன் மலர்மாலை மாற்றும்
கண் ஊஞ்சல் உல்லாச ஆட்டம்
கண் ஊஞ்சல் ஆடினாள் கற்பகவல்லி
பொன்னூஞ்சல் ஆடினாள் பொற்பத வல்லி.

லாலி சுப லாலி
லாலி சுப லாலி
காதலுடன் மலர் மாலை மாற்றும்
கண் ஊஞ்சல் உல்லாச ஆட்டம்
பாலாலே காலலம்பும் நேரம் எங்கள்
வடிவேலன் அருள் வெள்ளம் பாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வேந்திரன் அவன் மகளை அந்த
தெய்வயானை எனும் எழிலை
யோகங்கள் கூடும் சுபவேளை
யுவதியினைத் தாரை வார்த்துக் கொடுக்க
(கல்யாண வைபோகமே)

நல்மஞ்சள் நாணேறும் நேரம் எங்கும்
நர்த்தனமும் கொண்டாட்டம் சேரும்
வடிவேலன் முருகனின் திருக்கல்யாணம்
பூலோகம் வானுலகம் காணும்
(தெய்வயானை கல்யாணம்)

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே
வந்தவர்க்கும் பார்த்தவர்க்கும் ஆனந்தமே
முருகனுக்கும் தெய்வயானைக்கும் ஆனந்தமே
ஆனந்தமே ஆனந்தமே ஆனந்தமே
ஆனந்தமே பரமானந்தமே
பரமானந்தமே பரமானந்தமே.

(தொடரும்...

---

## ஒழுக்கம் உயர்வு தரும்

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்பெறும்" என்பது ஆன்றோர் வாக்காகும். செல்வம், பதவி, கல்வி என்னும் உயர்ச்சிகள் எல்லாம் ஒழுக்கத்துக்கு ஈடாகமுடியாது. ஒழுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தையல்ல. அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல நற்பண்புகளின் சேர்க்கையாகும். தனது சொந்தக் கடமைகளிலிருந்து பெற்றோருக்கு, சமூகத்துக்கு, நாட்டுக்கு ஆற்றவேண்டிய அத்தனை கடமைகளும், சேவைகளும் ஒழுக்கத்தினுள் அடங்கும். ஒழுக்கமானது சிறு வயதிலிருந்து கடைப்பிடிக்கப்பட்ட பயிற்சியாக அமைய வேண்டும்.

ஒழுக்கத்தை வளர்ப்பதில் பெற்றோர், ஆசிரியர், சமூகத்தின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து ஒழுக்கத்தைப் பேண வேண்டும். அன்றாடம் தமது சொந்தக் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து பெற்றோரை, பெரியாரைக் கனம்பண்ணுதல், பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லுதல், ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பளித்தல், அவர் கொடுக்கும் பணிகளைத் தவறாமல் செய்வது வரை ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளை சுயநலம் அற்றவர்களாகவும் பிறர்க்கு உதவும் சிந்தனை உள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டும்.

போதுமானளவு விளையாட்டு, மகிழ்ச்சியான பொழுதுபோக்கு அம்சங்கள் ஒழுக்கத்தைப் பேணுவதில் உதவியாக இருக்கமுடியும். தர்மத்தை, நீதியை, ஒழுக்கத்தைப் போதிக்கும் கதைகளை வாசித்தல், இனிமையான சங்கீதம், இசை நிகழ்ச்சிகளைக் கேட்டல், சித்திரம் வரைதல், நாட்டிய பயிற்சி ஆகியன சிறுவர்களிடையே ஒழுக்கமுள்ள மனப்பான்மையை வளர்க்கும் பயிற்சிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக இலக்கியங்கள்

*– திரு முருகவே பரமநாதன்* அவர்கள் –

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர், கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.

-கந்தர் அலங்காரம் 5.

முருகை உடையவன் முருகன் - முருகு- அழகு. இதற்கு அழகு, மணம், இளமை, கடவுட்தன்மை, கவின் பெரு வனப்பு என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். என்றும் இளையாய் அழகியாய் என நக்கீரர் பாடினார். முருகா எனவோர் தரமோதடியார், முடிமேல் இருதாள் அணிவோனே என்பது அருணகிரி வாக்கு. முருகார் நறுமலர் இண்டைகட்டி என அப்பர் தரும் பாடலடி- இண்டைதலைமாலை. இலட்சியம், இலக்கு உடையது இலக்கியம். இலங்குவது இலக்கியம். இலட்சியத்தைக் குறிக்கோள் என்று பாடினார் பா(டல்) வேந்தர் நாவரசர்.

பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்தநாளும் மெலிவொடு மூப்புவந்து
கோவனாய்க் கழிந்தநாளுங் குறிக்கோள் இலாதுகெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண் டீச்சரத்துளானே.

-திருமுறை 4:67:9.

வாழ்வுக்கு ஒரு இறுதி இலக்குண்டு. அது ஒரு இலட்சியப் பார்வை. பார்வை நோக்கு. இந்த இலக்கியம் பற்றி வித்துவான் நாராயண வேலுப்பிள்ளை இப்படி வரைந்துள்ளார்.

நாட்டு வரலாற்றுக்கும், நல்இலக்கியம் காட்டும் வரலாற்றுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நாட்டு வரலாறு மக்களின் புறத்தோற்றத்தை எடுத்துக்காட்டி அம்மக்கள் கண்ட வெற்றி தோல்விகளை அறிவிக்கும். இலக்கியம் புலப்படுத்தும் வரலாறோ மக்களுடைய நாகரிகத்தின் அகத்தோற்றத்தையும், பேரறிவையும், உள்ளத்தின் உணர்ச்சிகளையும் வெளிப் படுத்துவதோடு ஒழுக்க நெறிகளையும், சமய வாழ்க்கையையும் அறிவு நிலையையும் தெரிவிக்கும்.

இப் பகுப்பாய்வைச் சிந்திக்கும்போது தமிழ் இலக்கிய வரலாற்றிற் பக்தி இலக்கியம் பெரியதோர் முக்கியத்துவம் பெறக் காணலாம். பல்லவர் காலம் பக்தி இலக்கியம் துளிர்விட்டு, நாயக்கர் காலம் வரை விருட்சமாய் வளர்ந்து இற்றைவரை நிலைபெறக் காணலாம். சங்ககால இலக்கியங்களிலும், இவற்றின் முற்பட்ட தொல்காப்பிய காலத்திலும் முருகவணக்கம் பற்றிப் பேசப்பட்டிருப்பதை ஆய்வாளர் கண்டு வியந்துள்ளனர். பன்னிரு திருமுறை வரலாறு, பக்தி இலக்கிய வரலாறு என்னும் நூல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. முருக இலக்கியங்கள் என்ற பிரயோகம் முருகன் மேல் எழுந்த, முருகனைப் பற்றிக்கூறிய முருகவணக்கம் பற்றி

*அழகு என்பது மனதுதானே தவிர முகமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்த பெருநூல்களையெல்லாம் குறிக்கும். தோத்திரம், புராணம், தத்துவம், சமயம் புராணம் சார்ந்த, அப்பாலும் அமைந்த ஏடுகளை ஒருங்கடக்கும்.

தொல்காப்பியர் நிலங்களை நான்காக வகுத்து, அவற்றிற்கு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பற்றிப் பேசியுள்ளார்.

முதற்பொருள் நிலமும் பொழுதும் என இருவகைப்படும். மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி, வயலும் வயல்சார்ந்த நிலமும் மருதம், காடும் காடுசார்ந்த இடமும் முல்லை, கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல். இதை நானிலம் என்பர். கருப்பொருளாக தெய்வம் முதலாய் 14 அம்சங்கள் வருகின்றன. உரிப்பொருள் புணர்தல்.

புணர்தல் நிமித்தம் (குறிஞ்சி) ஊடல், வாடல் நிமிர்த்தம் (மருதம்) இரங்கல் இரங்கல் நிமித்தம் (நெய்தல்) என்பன. பிற்காலத்தில் பாலை என்றொரு திணை அமைக்கப்பட்டது. இதன் உரிப்பொருள் பிரிதல் பிரிதல் நிமித்தம். தொல்காப்பியர் தெய்வங்களையும் வகுத்தார்.

மாயோன் மேயகாடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

மாயோன்- திருமால், சேயோன்- முருகன், வேந்தன்- இந்திரன், வருணன்- நீர்த்தலைவன். பாலை வகுத்தபோது அதன் தெய்வம் கொற்றவை. இவை அன்பின் ஐந்திணையென அழைக்கப்பட்டன.

குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்கு குறிஞ்சியில் மட்டுமன்றி ஐந்து நிலங்களிலும் ஆலயங்கள் அமைந்துள்ளன. ஆறுபடைவீடுகளில் குன்றுதோறாடல் ஒன்று. செந்தூர் கடற்கரையிலும் வயலூர் செய்ப்பதியாகவும் திகழ்கின்றன. பரங்கிரி, பழநி, தணிகை, சுவாமிமலை குறிஞ்சி நிலங்களே- நமது மண்ணில் கதிர்காமம், வெருகல், திருக்கோயில், சித்தாண்டி, செல்வச்சந்நிதி எங்கேயமைந்துள்ளன எனச் சிந்திப்போம். உலகெங்கிலும் உள்ள கோயிலில் உறைவோனே என்பது அருணகிரி வாக்கு. எனினும் தமிழர் தெய்வமான முருகவணக்கம் இன்று ஒரு கலப்பு நிலையால் வந்த தெய்வநிலைதான் என ஆய்வாளர் கூறுவர். ஆரியர்களின் படையெடுப்பால் புகுந்த சுப்பிரமணியரும் (தெய்வயானையுடன்) தமிழர்தம் தெய்வமான முருகனும் (வள்ளியுடன்) கலந்த நிலையே இன்றைய வழிபாடு எனலாம். எனவே தொல்காப்பியர் பேசும் குறிஞ்சித் தெய்வமான முருகன்மேல் எழுந்த பக்தி இலக்கியங்களைத் திரட்டி முருகவேள் பன்னிரு திருமுறையென்ற தொகுப்பை வெளியிட்டவர் தணிகை மணி டாக்டர் வ.சு. செங்கல்வராயபிள்ளை (எம்.ஏ) அவர்களாவர். சைவத்திருமுறையை அடியொற்றி இது அமையக் காணலாம். வள்ளலார் பாடல்களும் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

## 1 முதல் 7 திருமுறைகள்

மூவர் தமிழை ஏழு திருமுறைகளாக வகுத்ததுபோல - படைவீடுகள் ஆறுக்குமான திருப்புகழ்கள் ஆறுதிருமுறை, ஏனைய (முருக) திருப்பதிகளின் மேல் எழுந்த திருப்புகழ்களின் தொகுப்பு ஏழாந்திருமுறை.

*எதையும் விட்டுவிடாதே. கற்றுக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8ஆம் திருமுறை

திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருப்பது போன்று (திருவாசகம் போன்ற) கந்தர் அலங்காரமும், அகப்பொருள் சார்ந்த திருக்கோவையார் போன்றமைந்த கந்தர் அந்தாதியும் ஒன்றாகி எட்டாந்திருமுறையாயின.

## 9ஆம் திருமுறை

இசைப்பாட்டான திருவிசைப்பா சைவத்திருமுறையில் ஒன்பதி லொன்றாய் அமைந்திருப்பதுபோல, இசைப்பாட்டாம் திருவகுப்பு ஒன்பதாந் திருமுறையாக அமைந்துள்ளது.

## 10 ஆம் திருமுறை

பன்னிரு சைவத்திருமுறை வரிசையில் பத்தாம் இடத்தை வகிப்பது திருமந்திரம். அஃதே போலக் கந்தர் அநுபூதி பத்தாந் திருமுறையாய் வகுக்கப்பட்டுள்ளது.

## 11ஆம் திருமுறை

பதினோராந் திருமுறையில் பன்னிருவர் பாடல்கள் 40 பிரபந்தங்கள் தொகுக்கப்பட்டுள்ளதுபோல பல முருகபக்தர்கள் பாடிய பாடற் தொகுப்பே இத் திருமுறையாகும்.

## 12ஆம் திருமுறை

தெய்வச் சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாவது திருமுறை அஃதே போல வரகவி தேனூர் சொக்கலிங்கம்பிள்ளை அவர் இயற்றியது சேய்த் தொண்டர் புராணம் 2708 பாடல்கள் கொண்டது. இதில் வரும் அடியார்கள் 41 பேர் விபரங்கள். சேய்த் தொண்டர் பற்றிய பாடல்கள் எட்டு. மற்றும் பலரது பாமாலைகளும் இடம்பெற்றுள்ளன.

இப் பன்னிரண்டு தொகுப்பையும் ஒப்பிடுகையில் அருணகிரியார் பிரபந்தங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. முருகன் மேல் எழுந்த பழைய பாடல்கள் சிலவற்றை இனிப் பார்ப்போம்.

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே. -பரிபாடல் 79.81.

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திருவொளிக்
குன்றி எய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
எம் வைகல் எய்திநின்றால் உலகே. -குறுந்தொகை.

சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்பெருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே. -சிலப்பதிகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னேயச் சண்முகம் தோன்றவான்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்தன் இவனென்று மாட்டிக் கொள்ளீரே. -திருமந்திரம்.

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும் பொன் மாமலையாய் போற்றி
முன்னிய கருணையாறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்கு மாமணியே போற்றி. -பழநித்தலபுராணம்.

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித் துணைவர் அருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்
சந்திப்போம் மலர் சொரிவோம் புகழ்ந்திடுவோம்
அவன் கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப்போமே. -திருவிரிஞ்சைப்புராணம்.

ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின்
இலை பார் விழிற் பறவையாம்
இதுநிற்க நீர்விழிற் கயலாம் இதன்றியோர்
இலையங்கும் இங்குமாகப்
பார்கொண்ட பாதியும் பறவைதா னாகஅப்
பாதியும் சேலதாகப்
பார்கொண் டிழுக்கஅது நீர்கொண்டிழுக்கஇப்
படிகண்ட ததிசயமென
நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூத மதுகொண்டு போய்
நீள்வரை எடுத்ததன் கீழ்வைக்கு மதுகண்டு
நீதிநூல் மங்காமலே
சீர்கொண்ட நக்கீரனைச்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரையாடி யருளே. -செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்.

*எமக்கு எம்மீது நம்பிக்கை இருக்கும்வரை வாழ்க்கை எம் வசம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 73

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நெஞ்சத்தை எமக்கொருவர் திறந்து காட்டிவிட்டால்
வஞ்சகத்தை அவர் நெஞ்சில் விதைத்திடுதல் நன்றன்று
திறந்திருக்கும் நெஞ்சமதுள் இறைவனார் உறைவதனால்
வஞ்சகங்கள் இறைவனுக்கே வெஞ்சினத்தை ஏற்படுத்தும்.

02 நம்காலின் முள்வலியை நாமுணரும் வேளையிலே
பிறர்காலின் வலியதையும் நாமுணர்தல் நன்றாகும்
பிறர்காலின் வலியதனை நாமுணரத் தவறிவிட்டு
நம்வலியை மட்டுமிங்கே வலியெனலே தவறாம்.

03 வேண்டாதார் என்றொருவர் பாதைக்கு முள்பரப்பி
வேண்டுவோற்காய் பின்னரதை அகற்றிடுதல் நன்றன்று
வேண்டாரும் வேண்டுவோரும் இறைவனுக்கு வேண்டுவதால்
வேண்டாற்காய்ப் பரப்புவது இறைவனுக்கும் பரப்புவதாம்.

04 பொய்யான போயகல மெய்ஞ்ஞான வழிதேடி
தொய்யாத பக்தியினை மேதினியில் துணையாக்கி
தெய்வீகக் கோயில்களை நெஞ்சத்துள் நிறுவினால்தான்
உய்வதற்கு உகந்ததொரு மனிதமிங்கு உருவாகும்.

05 சிந்திக்கும் ஆற்றலினைச் சிறைமீட்கும் சட்டமாக்கி
வந்துரைக்கும் சாட்சியாக மனச்சாட்சி தனைமாற்றி
சொந்தத்தில் நெஞ்சுள்ளோர் நீதிமன்றம் நிறுவினால் தான்
சுந்தரங்கள் சுடர்விடுமோர் மனிதமிங்கு உருவாகும்.

06 கோலத்தால் அகத்தேயும் புறத்தேயும் அழுக்ககற்றி
காலத்தால் அழியாதார் வரலாற்றை பொருளாக்கி
சீலத்தார் கல்லறையை நெஞ்சத்துள் நிறுவினால் தான்
என்றென்றும் போற்றிடவோர் மனிதமிங்கு உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பண்போடு பற்றினையும் பரப்பியே விறகாக்கி
எண்ணத்தில் தீயவற்றை இழுத்து வந்து அதிலேற்றி
சுட்டெரிக்கும் சுடுகாட்டை நெஞ்சத்துள் நிறுவினால் தான்
என்றென்றும் போற்றிடவோர் மனிதமிங்கு உருவாகும்.

08 ஆறாம் அறிவதனைப் புத்தகமாய்த் தினம் சுமந்து
நூறாம் ஆண்டுவரை இறைவனையே குருவாக்கி
கூறாம் பள்ளிகளை நெஞ்சத்துள் நிறுவினால் தான்
பேறாம் பெருமை தரும் மனிதமிங்கு உருவாகும்.

09 வலிகாலில் வந்துவிட்டால் கால்களுக்கு மருந்திடாமல்
கைகளுக்கு மருந்திடுதல் பெரும் வலியாய் மாறல்போல்
தவறுண்டேல் தவறியோற்கு அதையுரைத்துத் திருத்திடாமல்
தவறிலார்க்கு அதையுரைத்தல் பெருந்தவறை உருவாக்கும்.

10 செப்பிலோர் நாகம் செய்து செம்பினுள் பாலில் வைத்து
ஒப்பரிய கோயில் சென்று ஓர்நேத்தி முடித்துவிட்டு
அப்பவே திரும்பும் வேளை வீட்டுப்படியிலோர் நாகம் கண்டு
தப்பிடா தடித்துத் தாப்பார் இறை நிசத்தில்லை நிழலிலாமோ.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

பிறருக்கு கற்றுக்கொடுப்பதே மேலும் கற்பதற்கான வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் தொன்மை மிகுந்த இரு ஊஞ்சல் பிரபந்த இலக்கியங்கள்

*– திரு சண்முகலிங்கம் சஜிலன்* அவர்கள் –

ஊஞ்சலிசை அல்லது ஊஞ்சல் பிரபந்த இலக்கியமென்பது தொன்னூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். இது ஆலயங்களில் எழுந்தருளியுள்ள கடவுள்மீது பாடப்படும் பிரபந்தப்பதிக வடிவங்களிலொன்றாகும். பொதுவாக மகோற்சவம் அல்லது அலங்கார உற்சவம் நடைபெறும் ஆலயங்களில் விழாப்பூர்த்தியின்போது அல்லது கும்பாபிஷேக மணவாளக்கோல உற்சவம், திருக்கல்யாண உற்சவங்களின்போது இறைவனைத் திருவூஞ்சலில் வைத்து ஊஞ்சலினை அசைத்து பாடல்கள் பாடப்படுவது வழக்கமாகும். மாணிக்கவாசகர் இயற்றிய திருப்பொன்னூஞ்சல் பதிகமே அனைத்து ஊஞ்சல் பிரபந்தப்பதிகங்களுக்கும் முன்னோடியாகக் கருதப்படுகிறது.

ஈழத்தில் காணப்படும் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்களில் அனேகமாக எல்லா ஆலயங்களும் ஊஞ்சற் பிரபந்தத்தினைக் கொண்டிருக்கின்றன. சில ஆலயங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட திருவூஞ்சல்களையும் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை இயற்றும் ஆசிரியர்களும் யாப்பு இலக்கணங்களுக்கமைய மிகவும் சொல்நயம், கவித்துவம், இனிமை பொருந்தக்கூடியவாறு இயற்றுவதில் தனித்திறமை வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதனாலேயே இப்பிரபந்த இலக்கியம் தவிர்க்க முடியாதவாறு எல்லா ஆலயங்களிலும் முக்கியத்துவம் பெற்று விளங்கக் காரணமாக இருக்கின்றது. அந்தவகையில் ஈழத்தில் எழுந்த தொன்மையானதும் காலத்தால் மிகவும் முக்கியத்துவமான இரு ஊஞ்சற் பிரபந்த இலக்கியங்கள் பற்றி இக் கட்டுரையில் பார்க்கலாம்.

ஈழத்தில் இதுவரை கிடைக்கப்பெறும் ஊஞ்சற் பிரபந்த இலக்கியங்களுள் யாழ்ப்பாணத் திலுள்ள இரு தலங்கள்மீது பாடப்பட்டுள்ள பிரபந்தங்களே மிகப் பழைமையானதாகக் காணப்படுகின்றது. அவற்றிலொன்று காங்கேசன்துறைக்கு அண்மையிலுள்ள தையிட்டி என்ற ஊரில் அமைந்துள்ள கணேசவிற்கோட்டம் அல்லது கணையவிற் பிள்ளையார் என அழைக்கப் படும் ஆலயத்தின்மீது பாடப்பெற்றதாகும். மற்றையது வட்டுக்கோட்டையிலுள்ள சங்கரத்தை என்னுமிடத்தில் பிட்டியம்பதியில் எழுந்தருளியுள்ள பத்திரகாளியம்மன்மீது இப்பிரபந்தங்கள் பாடப்பெற்றதாகும். இரு ஆலயங்களிலுமுள்ள மூலமூர்த்திமீது இப்பிரபந்தங்கள் பாடப்பெற்றுள்ளன. இரு ஆலயங்களினதும் தலபுராணம் அல்லது தல வரலாற்றினூடாக இப்பிரபந்தங்களின் தொன்மையையும் அறிந்து கொள்ளலாம்.

## தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலயமும் திருவூஞ்சற் பதிகமும்

கணையவிற் பிள்ளையார் ஆலயம் மிகவும் புராதனமானது. மூலமூர்த்தியான பிள்ளையார் விக்கிரகம் சோழ அரசர் காலத்தில் சோழ அரசின் பிரதானியான வரராசசிங்க

*பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மௌனமாக இருந்தாலே போதுமானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவன் எனும் சோழ அரசியற் பிரதானியினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ் அரசர்களினால் நியமிக்கப்பட்ட உடையார் பரம்பரையினரே பல தலைமுறை கடந்து இன்றும் ஆலயத்தை பரிபாலனம் செய்து வருகின்றனர். யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, குருநாத சுவாமி கிள்ளைவிடுதூது ஆகிய நூல்களிலும், கச்சேரி கோவிற் பதிவுகளிலும் இவ்வாலயம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இருநூறு வருடங்களுக்கு மேல் மகோற்சவம் நடைபெற்ற ஆலயமாகவும் உள்ளது. 1950, 60ஆம் ஆண்டுகளிற்கு முன் மகோற்சவ காலங்களில் தமிழகம் மற்றும் ஈழத்தைச் சேர்ந்த பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றியுள்ளார்கள் என்பதை இவ்வாலய குறிப்புக்களின்மூலம் அறிய முடிகிறது. 1990ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட யுத்த அனர்த்த இடப்பெயர்வுகளாலும், ஆலயம் சுமார் 30 வருடங்களிற்குமேல் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டதாலும் ஆலய விக்கிரகங்கள், சொத்துக்கள் என்பன அழிக்கப்பட்டு ஆலயமும் கடுமையாக சேதமுற்று காணப்பட்டது. தற்போது மக்கள் படிப்படியாக குடியேறி வருவதால் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கணையவிற் பிள்ளையார் ஊஞ்சல் பதிகம் ஒல்லாந்தர் காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்த சுன்னாகம் வரதபண்டிதர் (1658 - 1716) என்பவரால் இயற்றப்பட்டது. வரதபண்டிதர் இயற்றிய மற்றைய செய்யுள் இலக்கியங்களாக பிள்ளையார் கதை, சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், அமுதாகரம், காங்கேசந்துறை குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது என்பன அமைகின்றன. வரதபண்டிதர் தான் இயற்றிய குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது பிரபந்தத்தில் கணையவிற் பிள்ளையார் ஆலயம் பற்றியும் குறித்துரைத்துள்ளார்.

எண்ணிய தன்மமுடன் செல்வமிகுந் - தையிட்டி
யிவ்வூரிற் ஜென்மமெடுத்த சனங்களுக்குப் - பொன்னினுடன்
துய்ய முப்பாலாறு விளை சோறுதலி - யாங்கவர்க்கு
வெய்ய பிணிநோய் விலக்கியே ஐயமறக் - கேட்டவரம்
நல்குங் கிருபைச் சமுத்திரமாங் கோட்டமதில் வாழும் - குலதெய்வம்

என அச் செய்யுள் அமைகிறது.

வரதபண்டிதர் இயற்றிய திருவூஞ்சற் பதிகத்தின் மூன்று செய்யுட் பாடல்களே இதுவரை பாரம்பரியமாக வழங்கப்பெற்று வருகிறது. மற்றைய செய்யுள்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இப்பிரபந்தத்தின் காப்புச் செய்யுள் பின்வருமாறு

சீராருஞ் செங்கமலப் பூவின் மேவுந்
தேவு புகழ் கணையவிற் நற்கோயில் வாழுங்
காரானை மாமுகலைங்கரன் மெய்ஞ்ஞானக்
கணபதிமேல் அன்னவூஞ்சற் கவிதைபாட
தாராருஞ் செஞ்சடைமேல் மதியஞ் சூடுந்
தற்பரனர் பொற்பாதந் தன்னைத்தேடும்
பேராரும் பன்மகயுத்துப மார்பையன்
பிறங்கு பொலன்றா மரைத்தாள் பேணுவாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய ஒரு பதிகப் பாடலையும் பார்க்கலாம்.

வடலரையிற் கொடுமுடியை வரிதிற்சாடி
வழிமுதலோரெழில் திகழ் சாமரைகள்வீச
விடஅரலின் நாதனணிச் சுடிகை வாய்ந்த
விண்மணி பொற்றன் மணி மாவிளக்கு மேந்த
குடமுனி யாகிய விமையோர் கணைல்கள் போற்ற
தோகனத நான்முகன் தன்னாசி சாற்ற
கடவுளையன் பூசைசெய்ய ஆடீருஞ்சல்
கணையவில் வாழ் கணபதியே ஆடீருஞ்சல்

## சங்கரத்தைப் பத்திரகாளியம்மன் ஆலயமும் திருவூஞ்சற் பதிகமும்

வட்டுக்கோட்டை சங்கரத்தையில் பிட்டியம்பதி என்னுமிடத்தில் அமைந்துள்ள பத்திரகாளியம்மன் ஆலயம் மிகப்பழமையானது. போர்த்துக்கேயர் காலத்திற்கும் முற்பட்ட ஆலயம். ஆதியில் பிட்டியம்பதி என்னுமிடத்தில் இருந்த விருட்சமான புளியமரத்தினை அந்தக் காணியின் சொந்தக்காரரான இருமருந்துய்ய முதலியார் பரம்பரையில் வந்த முதன்மை யினார் என்பவர் தறிக்கப்போக அருகிலிருந்த புற்றுக்குள்ளிருந்து சர்ப்பம் தோன்றியதுடன் அது முதன்மையினாரை சிறிது தூரம் துரத்திச் சென்று படமெடுத்தாடியது. இதனைக் கண்ணுற்ற முதன்மையினார் தமது தவறை உணர்ந்து பொறுத்தருளும்படி தெய்வத்தைவேண்ட அன்றிரவு அவரது கனவில் தோன்றிய அம்பாள் தமக்கு நிழல் அமைத்து வழிபடுமாறு பணித்தாள். அடுத்தநாள் அவ்விடத்தில் நிழல் அமைத்து வழிபடத் தொடங்கினர். அவ்வாறாக உருவாகிய ஆலயமே இன்று பெருவளர்ச்சி கண்டு நிற்கிறது. புளியமரத்தடியில் வீரபத்திரக் கடவுளுக்குமென கதிரை ஒன்று வைக்கப்பட்டு அதனை அவருக்குரிய ஆசனமாக நினைத்து வழிபட்டு வந்தனர். பொங்கல், வேள்வி, மடை, பலியிடுதல் என வழிபாடுகள் மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்று வந்தன. சிறுகுடிலில் இருந்த ஆலயம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்ப்பக்கிரகத்துடன் பரிபால சந்நிதிகளும் (பிள்ளையார், வைரவர்) அமைக்கப்பட்டு கற்கோயிலாக கட்டப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து மகோற்சவத்திருவிழா நடைபெற்று வருகிறது. ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் பழைமை வாய்ந்தவை. 1947ஆம் ஆண்டு ஆகம விதிகளுக்கமைவாக ஆலயம் அமைக்கப்பட்டது. 1985, 2001, 2012 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களினூடாக ஆலயம் பெருவளர்ச்சி கண்டது. வீரபத்திரர் சமேத பத்திரகாளியம்பாள் என்பதே ஆலயத்தின் பெயராகும்.

பத்திரகாளியம்மை ஊஞ்சற் பதிகத்தை இயற்றியவர் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தவரும் தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தில் தோன்றியவருமான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி ஐயராவார். இவர் வாழ்ந்த காலம் கி.பி 1709இலிருந்து கி.பி. 1784 வரை ஆகும். இவர் இவ்வூஞ்சற் பிரபந்தத்துடன் வீரபத்திரர் பதிகம், பத்திரகாளியம்மை பதிகம் என்பவற்றையும் இயற்றியுள்ளார். வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி, வாளபிமன் நாடகம், அலங்காரரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம், மலையக நந்தினி நாடகம், அதிரூபவதி நாடகம் என்பன இவர் இயற்றிய ஏனைய நாடகங்களாகும். இவர் இயற்றிய ஊஞ்சற்பதிகம் காப்பு, நூன்முகம், லாலி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. ஊஞ்சற்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இறைவிக்கு படைக்கவேண்டிய நிவேதனம் பற்றிக் கூறப்பட்டுள்ளமை இப்பிரபந்தத்தின் விசேட தன்மையாகும். அப்பிரபந்தப் பதிகத்தின் சில பாடல்கள் பின்வருமாறு.

திருமருவு வாணியிந்த ராணி தாமும்
திளம்பரலப் பிட்டிநகரதனின் மேவும்
உருமருவு மாதிபத்ர காளி மீதில்
உசிதமது ரத்தமிழி லூஞ்சல் பாட
மருமருவு மிதழிமதி யரலஞ்சூடும்
வள்ளல் பல்கின் மருவுகிள்ளை வசனியீன்ற
கருமருவு மதலதனப் புரிவெண் கோட்டுக்
கணபதி கிங்கிணிச் சரணங் காப்புத்தானே.
(நிவேதனம்:- நெய்ச்சாதம், அகுபன பாணக்கம், கரும்பு, அரிபதரம், படுகரம்)
மாமலிமா ணிக்கரத் நத்தூள் நாட்டி
மரகத மாமெழில் பெறுநற் சட்டம் பூட்டி
பூமலி சந் திரகிரண வடங்கள் கோத்துப்
புருடரா கத்தினுறு பலகை சேர்த்து
பாமலிசக் காவூஞ்சல் மிசையே மேவிப்
பாரதிசீர் படிக்கவிந்த்ரை வடந்தொட்டாட்ட
தாமமணி குழலணங்கே யாடீரூஞ்சல்
சக்திபத்ர காளியம்மை யாடீரூஞ்சல்.
(நிவேதனம்:- பருப்புச்சாதம், சீடை, மாம்பழம், பால், கற்கண்டு)

## இவ்விரு ஊஞ்சற் பதிகங்களின் தொன்மை

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் சுன்னாகம் வரதபண்டிதர் (1658 - 1716) (தையிட்டி கணையலிற் பிள்ளையார் ஊஞ்சல்), வட்டுக்கோட்டை கணபதி ஐயர் (1709 - 1784) (சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை ஊஞ்சல்), இணுவில் சின்னத்தம்பிப் புலவர் (இணுவில் சிவகாமியம்மை ஊஞ்சல்), அழகாண்மை வல்லப முதலியார் (சண்டிலிப்பாய் கல்லறைப்பிள்ளையார் ஊஞ்சல்), ஆனந்தசுப்பையர், (வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தையல்நாயகி ஊஞ்சல்), இருபாலை சேனாதிராச முதலியார் (1750 - 1840) நல்லூர்க்கந்தசுவாமி ஊஞ்சல், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஊஞ்சல்), சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராசர் (சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல்) ஆகியோர் ஊஞ்சல் பிரபந்தங்கள் இயற்றியோராக அறியப்படுகின்றனர். இவர்களுள் முதலிரு புலவர்களும் காலத்தால் முற்பட்டவர்கள். மற்றைய புலவர்கள் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்வரை வாழ்ந்தவர்கள்.

*வீணாகாத ஒரே விஷயம் உழைப்பு மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இப்புலவர்கள் எல்லோரும் வாழ்ந்த காலத்தினடிப்படையில் பார்க்கும்போது இதுவரை கிடைத்தவற்றில் தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஊஞ்சல் சங்கரத்தைப் பத்திரகாளியம்மை ஊஞ்சல் என்பனவே மிகப்பழமையானதாக இருப்பதை அறியமுடிகிறது. இவற்றுள்ளும் தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஊஞ்சல் காலத்தால் மிகவும் முந்தியதாகவும், அதற்கு சற்று பிற்பட்டதாகவும் பத்திரகாளியம்மை ஊஞ்சல் உள்ளது. எனினும் கணையவிற் பிள்ளையார் ஊஞ்சல் பதிகத்தில் காப்புச் செய்யுள், நூன்முகம், லாலி உட்பட மூன்று பாடல்களே தற்போது பாரம்பரியமாக வழங்கப்பட்டு வருகின்றன. மற்றைய பாடல்கள் காலமாற்றத்தால் மறைந்து விட்டன. பத்திரகாளியம்மை ஊஞ்சல், காப்பு, நூன்முகம், லாலி என முழுமையாக இன்றும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவே ஆலயத்தில் இன்றும் படிக்கப்படுகிறது. எனவே இவ்வடிப்படையில் நோக்கும்போது ஈழத்தில் இதுவரை கிடைக்கப்பெறும் ஊஞ்சல் பிரபந்தங் களில் தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஊஞ்சல் மிகப்பழமையானதாகவும் இன்றுவரை முழுமையாகக் கிடைக்கும் ஊஞ்சல் பிரபந்தங்களில் வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திர காளியம்மை ஊஞ்சல் மிகப் பழைமைமிக்கதாகவும் உள்ளது என்பதை அறியமுடிகிறது. இதன் பின்னர் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளிலேயே மிக அதிகமான ஊஞ்சற் பிரபந்தங்கள் ஈழத்து ஆலயங்கள்மீது அக்காலத்தில் வாழ்ந்த அறிஞர், புலவர் பெருமக்களால் பாடப் பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

---

## மிகப் பெரிய ஞானம்

ஒருமுறை பகவான் ஸ்ரீ ரமணமஹரிஷியிடம் பலரும் ஆன்மீக சம்பந்தமாக பல சந்தேகங்களைக் கேட்டுக்கொண்டிருந்தனர். பகவானும் ஒவ்வொன்றாக விளக்கினார். சந்தேகம் தீர்ந்த மகிழ்ச்சியுடன் எல்லோரும் அவ்விடம் விட்டுச் சென்றனர்.

ஆனால் ஒரே ஒரு பக்தர் மட்டும் தயங்கித் தயங்கி அங்கே நின்றுகொண்டிருந்தார். அவர் அதிகம் படிப்பறிவில்லாதவர்.

அதனால் மிகுந்த கவலையுடன் இருந்த அவர் பகவானிடம், “பகவான், அவர்கள் ஒவ்வொருவரும் ஏதேதோ கேள்விகள் உங்களிடம் கேட்டனர். நீங்களும் பதிலை அருளினீர்கள். ஆனால், பகவானே, எனக்கு ஒன்றுமே தெரியாது. ஏன், என்ன கேள்விகள் கேட்பது என்றுகூட எனக்குத் தெரியாது. என்னைப் போன்ற பாமரர்கள் ஞானம் பெறுவது எப்படி? முக்தி அடைவது எப்படி? நாங்கள் பிறந்ததே வீணதானா?” என்று கண்ணீர் மல்கக் கேட்டார்.

அதைக்கேட்ட பகவானுக்கும் கண்கள் கலங்கின. வாஞ்சையுடன் அந்த பக்தரைப் பார்த்த பகவான், “ஏன் இப்படி நீயாக எதையாவது நினைத்துக் குழப்பிக் கொள்கிறீர்? அவர் களுக்கு பல விஷயங்களில் குழப்பங்கள், சந்தேகங்கள் அதைப்பற்றி என்னிடம் கேள்வி கேட்டனர். நான் பதில் சொன்னேன். உனக்குத்தான் அந்த மாதிரி குழப்பங்கள் ஏதும் இல்லையே! உனக்கு ஒன்றுமே தெரியாது என்கிறாய். தனக்கு ஒன்றுமே தெரியாது என்று உணர்வதுதான் உண்மையிலேயே மிகப்பெரிய விஷயம். இதைவிட வேறென்ன வேண்டும்? எல்லாவற்றையும் ஈசன் பொறுப்பில் விட்டுவிட்டு பற்றில்லாமல் உன் கடமைகளைச் செய்து வா. உனக்கு முக்தி கிடைக்கும்” என்றார் பகவான். பக்தரும் மகிழ்ச்சியுடன் அவ்விடம் விட்டு அகன்றார்.

*சமாதானமே சிறந்த மற்றும் மலிவான வழக்கறிஞர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மதம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

எமது மதமான இந்துமதத்தின் சிறப்பே அதன் தொன்மையில் அடங்கியுள்ளது. பழமையே அதன் சிறப்பு வைதீக தர்மமே அதன் அத்திவாரம். சிந்து நதிப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இந்துக்கள் என்றழைக்கப்பட்டனர் அவர்கள் கடைப்பிடித்த மதம் இந்து மதம் ஆயிற்று. தனி மனிதன் ஒருவனால் தோற்றுவிக்கப்படாது இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட நெறிப்படுத்தப்பட்ட ஒரு மதம் என்பது எமது மதத்தின் நெறிப்படுத்தப்பட்ட பெருமையாகும்.

மதம் என்று சொல்லும்போது, அதன் முதற்படி வழிபாடு, ஒழுக்கம், நெறி என்பனவாம். இறைவழிபாடு ஆறறிவு படைத்த மனிதனோடு தோன்றி வளர்ந்து வரும் ஒன்றாகும். இது மந்திரஜெபம், வேள்வி, தவம், தியானம் என ஆரம்பித்து அபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம் நேர்த்தி, நிவேதனம், தோத்திரம் பஜன் என வளர்ந்து வந்துள்ளமை கண்கூடு.

இறைவழிபாடு தினமும் யாம் செய்யவேண்டிய ஒன்றாகும். இன்று நேரமில்லை நாளை பார்ப்போம் என்று விடும் விஷயமல்ல இது. சிறிது நேரம் இறைவனை வழிபடும்போது அகமும் புறமும் அமைதியாக அமைதல் அவசியம். வீட்டிலே இத்தகைய அமைதியை உருவாக்குவது சிரமம்தான். இருப்பினும் தினமும் மலர்கொய்து இறைவனுக்கு சாற்றி தீபமேற்றி தூபமிட்டு இசையை விரும்பும் இறைவனுக்கு ஒரு தோத்திரம் தன்னும் நாம் தினமும் பாடி வழிபடவேண்டியது எமது அன்றாட கடமைகளில் முக்கியமானது. நாளும் நாம் கடைப்பிடிக்கவேண்டியது இறைநாம ஜபம் ஆகும். தினமும் நாம் வீட்டில் செய்யும் வழிபாட்டோடு வாரந்தோறும் திருக்கோயில் வழிபாடும் செய்தல் நன்று.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று அறியாமலா சொன்னார்கள்.

ஆலயத்திலே நாம் செய்யவேண்டியது, வழிபாடு ஒன்று மட்டுமே. வழிபட என ஆலயம் சென்று அங்கு தெரிந்தவர்களைக் கண்டதும் அவர்களோடு பேசி, தவப்பொழுதை அவப்பொழுதாக்குதல் வேண்டாத ஒரு செயலாகும்.

கண்ணைக் கவரும் உடைகளும் பகட்டான அலங்காரங்களும் பக்திநெறிக்குப் புறம்பானவை. எமது தூய பக்தி எம்மை அழகுபடுத்தினால் போதுமானது. நாம் அர்ச்சிக்கும் பூக்களும், பாக்களுமே ஆண்டவனை அழகுபடுத்தப் போதுமானவை. பக்திமேலீட்டினால் நாம் விடும் கண்ணீரே, இறைவனுக்கு நாம் செய்யும் அபிஷேகமாகும்.

எமக்கென ஒன்றும் கேளாது, உலக நலத்தை யாம் வேண்டுவதே இறைவழிபாட்டில் நாம் வேண்டற்பாலது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற வாக்கிற்கிணங்க மற்றோருக்கு இம்சை செய்யாதிருப்பதும் நல்ல தொண்டெனலாம். தொடர்ந்து நாம் நல்லவற்றைத் தினமும் செய்துவர எமது பழ வினைகள் பலமிழக்கும். ஞானம் பிறக்கும். இது இறைவன் அருளின் பின்னணியில் இடம்பெறுகின்றது. இதையே மணிவாசகப் பெருமான் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" எனப் பாடியுள்ளார்.

*யார் இழப்பதற்கு பயப்படுகிறார்களோ அவர்களே தோல்வி அடைந்தவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை நம்புவது, இறைவனைத் தியானிப்பது, இறையுண்மைகளைப் பரப்புவது, எல்லோரையும் நன்னெறியில் இட்டுச்செல்வது, உயிர்களைக் கொல்லாதிருப்பது இவை யாவும் இறைபணியே ஆகும்.

திருக்கோயில் செல்லும் முன் நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து, வெண்ணீறணிந்து புறத்தூய்மையுடனும் செல்லல் வேண்டும். திருநீறு அணிந்து ஐந்தெழுத்தை ஓத வேண்டும்.

அண்டம் எங்கும் வீற்றிருக்கும் ஆண்டவன் எம்முள்ளும் வீற்றிருக்கின்றான். உயிர்களில் கொண்ட கருணையினால் ஆலயங்களிலும் வீற்றிருக்கின்றான். இதனால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என எம் முன்னோர் கூறிப் போந்தனர்.

ஆலய வழிபாட்டின்போது முதலிலே ஸ்தூல லிங்கம் என்றழைக்கப்படும் கோயிற் கோபுரத்தை வணங்க வேண்டும். ராஜ கோபுரத்தைத் தாண்டிச் சென்று எமது கீழான இயல்புகளைப் பலியிடும் வகையில் பலிபீடத்தை வணங்கியபின் மூர்த்தியை வணங்க வேண்டும். கொடித் தம்பத்தின் அருகே இருக்கும் நந்தி வாகனம் மூலஸ்தானத்தைப் பார்த்தவண்ணமிருப்பதை அவதானிக்கலாம். இறையை அடைய சர்வகாலமும் எமது சிந்தனை இறை நாட்டத்திலேயே இருக்கவேண்டும் என்பதையே இது புலப்படுத்துகின்றது.

கோயிலுக்குச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லல் ஆகாது என்பது ஐதீகம். எனவே ஆலயத்திற்கு நாம் எடுத்துச் செல்லும் பொருள் ஆலய வழிபாட்டிற்கு உகந்ததாக அமைதல் அவசியம்.

மூர்த்தியை, அம்பாளை, பரிவார தெய்வங்களை வழிபட்ட பின் சண்டேஸ்வரப் பெருமானை இரு கரங்களையும் கைதட்டி வணங்குதல் முறை என ஒரு விளக்கம் உண்டு.

தொடர்ந்து வைரவரை வணங்கி நவக்கிரக வழிபாடு செய்தபின் தியான மண்டபத்தில் அமர்ந்து சிறிது நேரம் தன்னும் தியானம் செய்தபின் இல்லம் திரும்புதல் முறையாகும்.

எனவே, எத்துணை கடமைகள் எமக்கிருப்பினும் இறைவழிபாட்டை எமது அன்றாட வாழ்வில் தவறாது சிறிது நேரம்தன்னும் செய்து, இம்மையில் இன்னருள் பெற்றுய்ய, யாம் திட சங்கற்பம் எடுத்தல் அவசியம். எடுப்போமா?

---

ஒருவனிடம் தர்ம சிந்தனை இருக்கும்பொழுது, அந்த தர்மமே அவன் எதிர்காலத்தை பார்த்துக்கொள்ளும். ஏன் என்றால், ஒரு மனிதன் என்ன பிரார்த்தனை செய்தாலும் எத்தனை மந்திரங்கள் உச்சரித்தாலும், எத்தனை அபிஷேகங்கள், யாகங்கள் செய்தாலும்கூட அவனிடம் உதவும் குணம் இல்லையென்றால், ஏன் இறை நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட பரவாயில்லை, தர்ம குணமும் பிறருக்கு உதவும் குணமும் இருந்துவிட்டால் போதும் இவன் இறையைத் தேடவேண்டியதில்லை. இறை இவனைத் தேடி வந்துவிடும். எவன் அதிக அளவு தர்மம் செய்கிறானோ, அவனிடம் இறையே வந்து கையேந்தும்.

*உங்களை விமர்சிப்பவர்கள் மட்டுமே உங்களை பலம்வாய்ந்தவராக மாற்ற முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| A. நடராசா | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| வரதராஜா சர்மிளா | திருகோணமலை | 10000. 00 |
| சி. முருகையா | திருகோணமலை | 5000. 00 |
| வி. மகாலெட்சுமி | இணுவில் உடுபுடவை | 8040. 00 |
| நளாயினி சிவகுமார் | கனடா | 10000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| க. நிரஞ்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஜெ. சியாலினி | கரணவாய் 60kg அரிசி | 5000. 00 |
| ஸ்ரீ. சுகந்தினி | சிறுப்பிட்டி | 500. 00 |
| பா. செல்வகுமார் | பிரான்ஸ் (சாவகச்சேரி) | 15000. 00 |
| பி. ஆரூஸ் | கனடா (ஏழாலை) | 20000. 00 |
| மகாலிங்கம் | ருக்மணிதேவி நீர்வேலி | 1000. 00 |
| ந. பிறேம்ராஜ் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | கொழும்பு | 1500. 00 |
| சி. கயூரன் மூலம் S. கிருஷாந் | கனடா | 10000. 00 |
| உ. சங்கர் சுகந்தினி | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| Dr வை. பாலகிருஷ்ணன் | வதிரி | 2000. 00 |
| இ. ஸ்ரீசியாமளன் | புத்தூர் | 1000. 00 |
| சிவசுப்பிரமணியம் சரஸ்வதி | ஆவரங்கால் | 5000. 00 |
| பா. பரந்தாமன் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| சி. தில்லைமணி | மல்லாகம் | 2000. 00 |
| ரஜினா குணராஜா | மூத்தவிநாயகர் கோவிலடி | 5000. 00 |
| பா. திலகவதி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| S. புஸ்பலோஜினி | நுவரெலியா | 3000. 00 |
| த. ஸ்ரீரஞ்சன் | அளவெட்டி | 2000. 00 |
| இ. கணேசநாதன் | குப்பிளான் | 5000. 00 |
| ந. ஸ்ரீஸ்கந்தராஜா | திருநெல்வேலி | 4000. 00 |
| கந்தசாமி நாகேஸ்வரி | உடுவில் | 5000. 00 |

*மனிதன் சந்தர்ப்பங்களால் உருவாக்கப்படுபவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிவகுமார் ஜெகதீஸ்வரி | சுழிபுரம் | 2000. 00 |
| Dr கதிர்காமநாதன் | சாவகச்சேரி | 25kg அரிசி |
| பா. ஞானவேல் | தெல்லிப்பழை | 1000. 00 |
| R. மகிழன் | மீசாலை | 5kg சோயா |
| ரஞ்சனதாஸ் ஜஷாந் | கொக்குவில் | 10000. 00 |
| S. பாக்கியம் | கொக்குவில் | 2000. 00 |
| த. அக்ஷயராம் | தொண்டைமானாறு | 10000. 00 |
| த. அஜிந்தன் | அல்வாய் கிழக்கு | 25000. 00 |
| த. தபோஜன் | தெல்லிப்பழை | 500. 00 |
| பு. புஸ்பகரன் | கரவெட்டி | 5000. 00 |
| ச. பொன்னம்பலம் | இணுவில் | 2000. 00 |
| சாயி அனுக்கிரஹா | நீர்வேலி | 5000. 00 |
| த. மங்கையற்கரசியம்மா | கரணவாய் | 5000. 00 |
| ம. மகிந்தன் | தெல்லிப்பழை | 500. 00 |
| தணிகாசலம் இராஜேஸ்வரி | அல்வாய் | 500. 00 |
| த. இராஜேஸ்வரன் | அல்வாய் | 1000. 00 |
| S. சிவசுதன் | சாவகச்சேரி | 2000. 00 |
| வதீஸ் தினுபா | எழுதுமட்டுவாள் | 1000. 00 |
| கல்யாண சுப்பிரமணியர் ஆலயம் | சுவிஸ் | மரக்கறி, தே.எண்ணெய், அரிசி |
| ஏ. மயூரி, ஏ மகிழினி | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| N. கிருஸ்ணகுமார் | புலோலி | 1000. 00 |
| வா. தங்கமலர் | கிளிநொச்சி | 500. 00 |
| ப. பிருந்தாபன் | சங்கானை | 500. 00 |
| ஜெ. நிதுஷன் | இணுவில் | 2000. 00 |
| அம்பிகைதாசன் விஸ்வநாயகி | பரந்தன் | 5000. 00 |
| J. விசாகன் | கிளிநொச்சி | 3000. 00 |
| செ. சின்னத்துரை | கரவெட்டி | 2000. 00 |
| பொ. தர்மராஜசிங்கம் | தெல்லிப்பழை | 10000. 00 |
| ஸ்ரீ பரமாத்மா | புத்தளம் | 1000. 00 |
| ஸ்ரீ. சுதர்சன் | புத்தளம் | 1000. 00 |
| இ. யதீசன் | அல்வாய் | 500. 00 |
| சி. நாகலிங்கம் | கரணவாய் | 5000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் | 5000. 00 |
| முருகன் அடியார் | அரியாலை | 1500. 00 |
| K.K. தங்கவேல் | குப்பிளான் (கனடா) | 20000. 00 |
| ச. பரஞ்சோதி | கோண்டாவில் | 20kg அரிசி 2000. 00 |
| கோ. லிதிகேசன் | சாவகச்சேரி | 500. 00 |
| சி. பாலசிங்கம் | சண்டிலிப்பாய் | 5000. 00 |

*புத்திசாலித்தனமும் தன்மானமும் ஒன்றை ஒன்று எதிர்த்துக்கொண்டே இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆ. காமாட்சி | உடுப்பிட்டி | 40000. 00 |
| ஆ. சயந்தன் | கரவெட்டி (கனடா) | 10500. 00 |
| K.M. செல்வரட்ணம் | நவாலி | 4000. 00 |
| ச. ரூபபாலன் | உரும்பராய் | லக்ஸ்பிறே, தே.எண்ணெய், தேயிலை, சோயா, சீனி |
| கு. கருணாகரன் | ஊரெழு | 5000. 00 |
| S. ஈஸ்வரன் | மாதகல் | 5000. 00 |
| மோ. அருந்ததி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| N. லட்சுமிகாந்தன் | உடுப்பிட்டி | 10000. 00 |
| A. அரவிந்தன் | நல்லூர் | 2000. 00 |
| ம. கஜந்தன் | சுன்னாகம் | 1000. 00 |
| தா. சுகந்தன் | தாவடி மரக்கறி, 35kg அரிசி | 5000. 00 |
| சி. செல்வராசா | அச்சுவேலி | 2000. 00 |
| திரு அச்சுதானந்தன் குடும்பம் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| S. ஸ்ரீஸ்கந்தராஜா (UNOPS) | உடுப்பிட்டி | 10000. 00 |
| திருமதி சிவசுப்பிரமணியம் மூலம் லோகினி நினைவாக | தாவடி | 95000. 00 |
| அ. ரமேஸ் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| கு. சுமுகலிங்கம் | பூநகரி | 2000. 00 |
| மு. கந்தசாமி | பருத்தித்துறை | 5000. 00 |
| அ. லவன் குடும்பம் | நீர்வேலி மரக்கறி 2புட்டி அரிசி | 2000. 00 |
| சுதர்ஷன் அனுஷ் | புத்தூர் | 500. 00 |
| கலைமகள் விலாஸ் | சங்கானை | பருப்பு 25kg அரிசி |
| செ. கவிதா | (UK) வல்வெட்டி | 30000. 00 |
| க. விஸ்வஜோதிரட்ணம் நினைவாக | நவாலி | 15000. 00 |
| இ. பாக்கியராணி நினைவாக | ஆவரங்கால் | 7000. 00 |
| சயந்தன் சீவரட்ணம் | தொண்டைமானாறு | 10000. 00 |
| M. மிதூன் | சிறுப்பிட்டி | 2000. 00 |
| ஆ. சுந்தரலிங்கம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| ச. ஜெயதாசன் | சுன்னாகம் | 1000. 00 |
| பா. கதிர்மகள் | கனடா | 10000. 00 |
| E. சண்முகராஜா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| செல்வி குகனேசமலர் மூலம் பொன்னுத்துரை நினைவாக | உரும்பராய் | 3000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 1000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| இ. ரவீந்திரநாதன் | காங்கேசந்துறை | 10000. 00 |
| வ. ரவி | திருநெல்வேலி | 10000. 00 |
| வை. தர்ஷன் | மல்லாகம் | 5000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ப. தவநாதன் | வல்வெட்டி | பருப்பு, 6புட்டி அரிசி |
| சன் கந்தையா குடும்பம் | மூளாய் | 2மூடை நெல் |
| பா. சுசீலாதேவி | பண்டத்தரிப்பு | பருப்பு, உ.கிழங்கு, 1மூடை அரிசி |
| த. சந்திரராஜன் | ஆரயம்பதி | 1000. 00 |
| அ. கௌதமன் | பருத்தித்துறை | 10000. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| திருமதி ப. சிவகாமசுந்தரி | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| தெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 2000. 00 |
| த. அருணா குடும்பம் | பின்லாந்து | 10000. 00 |
| இ. விநாயகமூர்த்தி குடும்பம் | லண்டன் | 2500. 00 |
| சு. அனாமிக்கா | பின்லாந்து | 2500. 00 |
| திரு பாமதாஸ் குடும்பம் | நெதர்லாந்து | 2000. 00 |
| மோனிஸ் | தெல்லிப்பழை | 1500. 00 |
| வ. மாலினி, வ. அட்சாயினி | பிரான்ஸ் | 10000. 00 |
| ஆ. தெய்வேந்திரம் குடும்பம் | பிரான்ஸ் | 2000. 00 |
| செல்வி அப்பாக்குட்டி குடும்பம் | பருத்தித்துறை | 1000. 00 |
| சி. முருகேசபிள்ளை | பருத்தித்துறை | 5000. 00 |
| பொ. ராகவன் | கொழும்பு-13 | (25kg) 25மூடை அரிசி |
| செ. சக்திதரன் | கொழும்பு-13 | 5000. 00 |
| மு. பிரதக்ஷன் | ஹற்றன் | 5000. 00 |
| சா. சாய்பிரவீன் | புதுக்குடியிருப்பு | 10000. 00 |
| திரு மாரியப்பன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| செ. ஜீவராஜ் | கோண்டாவில் | 8000. 00 |
| திரு ஆறுமுகம் குடும்பம் | உரும்பராய் | 2000. 00 |
| செல்வரத்தினம் கண்ணகைப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 22100. 00 |
| திரு செந்தூரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| திரு தாஸ்குமார் குடும்பம் | கொழும்பு | 3000. 00 |
| திரு செல்வரட்ணம் குடும்பம் | சுழிபுரம் | 1000. 00 |
| அ. கலாவதி | பிரான்ஸ் | 6000. 00 |
| ஜீவன் மோட்டோர்ஸ் | புத்தூர் | 1000. 00 |
| இ. தவமணி | கரவெட்டி | 5000. 00 |
| த. உருத்திரா | பருத்தித்துறை | 15000. 00 |
| ஆ. சிவசுப்பிரமணியம் | இணுவில் | 1புட்டி அரிசி 2000. 00 |
| திருமதி லவஷாந் | கோண்டாவில் | 3000. 00 |
| Dr V. கணேசவேல் | உரும்பராய் | 1000. 00 |
| த. ஸ்ரீதர் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சோ. பகீரதன் | சுன்னாகம் | 50000. 00 |

(தொடரும்...

*இதய வங்கியில் அன்பைச் சேமியுங்கள். அதை எந்தத் திருடனாலும் களவாட முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் சத்திநிபாதம் பெற்றமை

*– திரு கு. சிவபாலராஜா* அவர்கள் –

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று தவத்திற்கும் அதன் பயனாகிய ஞானத்திற்கும் ஏதுவாக உள்ளது சத்திநிபாதம் ஆகும். உயிர்கள் தம்மைப் பீடித்துள்ள ஆணவம் முதலிய மலங்களின் பிடியிலிருந்து விடுதலையடைய வேண்டிய தேவையுள்ளது. அல்லாவிடில் அவ்வுயிர்கள் தமது குறிக்கோளாகிய முத்திப்பேற்றினையடைய முடியாது போகும். இறை சக்தியின் காரணமாக உயிர்கள் மலநீக்கம் பெறுகின்றன. அல்லாவிடில் உயிர்கள் பிறவித் துன்பத்தை அடையவேண்டிய நிலையேற்படும். இறைவனின் இயற்கையான செயல் அருள் வழங்குதல் என்பதே. அதன்படி இறையருளால் அவனது சக்தி உயிர்களிடத்தில் பதிவது சத்திநிபாதம் எனப்படும். "நிபாதம்" என்பது அருள் வீழ்ச்சி என்பதாகும். "அருள்வீழ்ச்சி" என்பது ஓர் அதிர்ச்சியளிக்கும் வீழ்ச்சி எனவும் கூறப்படுகிறது. எனவே சரியை ஆகிய நெறிகளில் நிற்போர் முதலில் பெறவேண்டியது "சத்திநிபாதம்" ஆகும். மலபரிபாகத்திற்கேற்ப இச்சத்திநிபாதம் மெல்லவும் விரைவாகவும் நிகழும். அவை மந்தம், மந்த தரம், தீவிரம், தீவிர தரம் என நால்வகைப்படும். ஆணவ மலத்தின் சக்தி மெலிவடையும்போது உயிர்களுக்கு இருவினையொப்பு உண்டாகும். இருவினையொப்பு என்பது இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் இன்றி இரண்டையும் சமமாக எண்ணும் நிலையை அடைதல் இருவினையொப்பு என்பர். "எல்லாம் சிவன் செயலே என்று இருத்தல்" இதுவாகும். இருவினையொப்பு கிடைத்துவிட்டால் சத்திநிபாதம் பெறலாம். சத்திநிபாதம் என்பதற்கு அருட்சத்தியின் பதிவு எனப் பொருள்படும். சத்திநிபாதம் என்பது சத்தி நன்கு பதிதலாகும். மலத்தின் சத்திகள் வீழ்ந்தொழிந்து அருள் பெருகும் சக்திகள் பெருகுதல் சத்திநிபாதம் ஆகும். இவ்வாறு அருள் சத்தி பதிவுக்கேற்பவே அறிவு சக்தி பெருகும். இதில் "மந்தம்" என்பது அற்பமாக அறிவு பெறுதலைக் குறிக்கும். "மந்ததரம்" என்பது, மந்தமாய் இருந்து மந்திரங்களை உபாசிப்போன். "தீவிரம்" என்பது யோகப் பயிற்சி செய்வோன். "தீவிரதரம்" என்பது ஞான மார்க்கத்தை அனுசரித்து நடப்பவர் என்பது.

திருமூலர் பதினாறு திருமந்திரங்களால் சத்திநிபாதம் விளக்கியுள்ளார். இத் திருமந்திரங்கள் யாவும் சத்திநிபாதத்தின் கொள்கைகளையும் மற்றும் கருப்பொருள், பிரிவுகள், பயன்கள் என்பன பற்றிக் கூறியுள்ளன. இவை உலகியல் வாழ்க்கையில் ஈடுபடுவோர்க்குப் பெரிதும் தேவைப்படுவனவாம். திருமந்திரம் அருளிய திருமூலர், தான் திருமந்திரம் அருளிச் செய்வதற்காக தனக்குள் ஏற்படக்கூடிய அருட்சக்தி வீழ்ச்சியைக் குறித்து சத்திநிபாதம் அனுபவித்துள்ளார். தான் பெற்ற இந்த அனுபவத்தினைத் தனது மாணவர்களுக்குக் கூறுவதற்காக ஏழு திருமந்திரங்களால் கருத்துடன் கூறியுள்ளார். இந்த ஏழு திருமந்திரங்களும் திருமந்திர நூலில் ஆங்காங்கே காணப்படுதல் காணமுடியும். ஏனைய பதினாறு திருமந்திரங்களும் சத்திநிபாதம் என்னும் அதிகாரத்தின்கீழ் காணப்படுகிறது. திருமூலர் திருவாவடுதுறைத் திருத்தலத்தில் படர் அரசமரத்தின்கீழ் அமர்ந்து யோக நிலையில் இறைவியின் அருட்சத்தியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திநிபாதம் பெற்று பின் திருமந்திரம் அருளியுள்ளார். ஒவ்வொரு திருமந்திரத்திலும் சத்திதேவியைப் பணிந்து போற்றியுள்ளார். திருமூலர் அன்பினால் இறைவனைப்பற்றி நின்று, இயல்பான முறையில் பாசங்களாகிய ஆணவம், கன்மம், மாயைகளிலிருந்து நீங்குதல் துறவு எனப்படும். வினை நீக்கமும், இருள் நீக்கமும் துறவினை மேற்கொண்ட உயிர்களுக்கு உண்டாகும்.

முன் செய்த வினைகளின் வழி பிறந்தும், வினை நீங்கிய வழி இறந்தும், அறியாமையால் எதைச் செய்வது, எதை விடுவது என்பதை மறந்து அறியாமை நீங்க அறியாமையில் மறைந்து நிற்கும் உயிர் அறிவிற் சிறந்த சத்திநிபாதம் உண்டான காலத்துப் பற்றுக்களைத் துறந்த உயிர்க்கு இறைவன் சோதியாய் விளங்குவான்.

பிறந்தும் இறந்தும் பல் பேதமை யாலே
மறந்து மலவிருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பருவத்துத்
துறந்த உயிர்க்குச் சுடரொளி யாமே.

-திருமந்திரம் 1615.

சத்திநிபாதம் பற்றிய திருமூலரின் நேரடி அனுபவங்களை அவர் திருவாவடுதுறையில் படர் அரசரமரத்தின் கீழ் அமர்ந்து சத்தி தேவியை வேண்டி சத்திநிபாதம் பெற்றுக்கொள்ளப் பாடிய திருமந்திரங்களில் தெளிவாகக் காணலாம். இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்தால் சத்திநிபாதம் வரும். சத்திநிபாதம் வந்தார்க்கு இறைவனே குருவாய் வந்து ஞானத்தை உணர்த்துவார். சிவன் என்பது அதன் சத்தியைக் குறிக்கும். சத்திநிபாதம் வருவது ஓர் கல் வந்து பெரிய சனக்கூட்டத்தினரின் நடுவே வீழ்வது போலவும், அச்சனங்கள் யாவரும் நான்கு பக்கமும் சிதறிக் கலைந்து ஓடுவதைப் போன்றது. எனவே அதை வீழ்ச்சி என்றுள்ளனர். பல காகங்கள் சேர்ந்து இருக்குமிடத்தில் ஓர் கல் வந்து வீழ்ந்தால் அக் காகங்கள் அத்தனையும் கலைவது போலவும் இவ் விளக்கத்தைக் கூறலாம். இது ஓர் அருமையான சித்தாந்த விளக்கமாகும்.

தனது மாணவர்களில் ஒருவராகிய இந்திரன் என்பவரைப் பார்த்து அம் மாணவனுக்குப் போதனை செய்த திருமூலர் சத்திநிபாதம் பற்றிய தனது அனுபவ விளக்கத்தை அம் மாணவனுக்குக் கற்பித்துள்ளார். திருமூலர் நீண்டகாலம் வாழ்ந்தமைக்கான காரணம் புவனாபதி யாகிய சத்தியைத் துதித்து, அன்பினால் அவளை விரும்பி, அவள் உடன்நின்று அவளைப் பணிந்தமையால், அவளின் அருள் எனக்குக் கிடைத்தது. இது அருள் வீழ்ச்சியினால் எனக்குக் கிடைத்த பேறு ஆகும் என்றுள்ளார் திருமூலர்.

இருந்த அக் காரணம் கேள் இந்திரனே
பொருந்திய செல்வப் புவனாபதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே.

-திருமந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவடுதுறை அம்மை" என்பது உமாதேவியார் பசு வடிவில் வந்து சிவனைப் பூசித்த திருத்தலத் தலைவியின் பெயர். தேவியானவள் சிவபெருமானது சத்தியே என்பதை திருமூலர் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார். அவ்வாறான சத்தி தேவியானவள் எனது பிறப்பால் அறுத்து வீடுபேறு தந்து என்னை ஆட்கொண்டவள். அவள் மிக்க புகழ் உடையவள் என்று உபதேசித்தார் திருமூலர். இதுவும் திருமூலர் தன் மாணவருக்கு உபதேசித்த பகுதியே. அவள் திருவடி நீழலில் தான் இப்போது இருப்பதாக திருமூலர் மாணவரை நோக்கிக் கூறியுள்ளார்.

நேரிழையாவாள் நிரதி சயானந்தப்
பேருடையாள் என் பிறப்பறுத் தாண்டவள்
சீருடையாள் சிவன் ஆவடு தண்டுறை
சீருடையாள் பதம் சேர்ந்திருந் தேனே.

-திருமந்திரம்.

நான் உமாதேவியின் பதம் சேர்ந்திருந்தமையால், அவளை ஒரு பாகத்தில் உடைய சிவனையும் சேர்ந்திருக்கின்றேன் என்று தெளிவுபடுத்தியுள்ளார் திருமூல நாயனார். திருவாவடு துறைத் திருத்தலம் சிவனுக்கும் சத்திக்கும் உரிய தலம். இத்தலத்தில் படர் அரச மரத்தின்கீழ் அமர்ந்து சிவனது திருப்பெயர் பலவற்றையும் ஓதித் துதித்துக் கொண்டிருக்கிறேன்.

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

-திருமந்திரம்.

திருமூலநாயனார் பல்லாண்டுகள் வாழ்ந்தவர். அவ்வாறு பல்லாண்டுகள் வாழ்ந்தமைக் கான காரணம்; சிவஞானப் பேரொளி தனக்குக் கிடைத்தமைதான் என்கிறார். இப் பேரொளி கிடைத்திருக்காவிடில் அவ்வாறு வாழுதல் முடியாது. இப் பேரொளியைத் தந்தவர் சிவபெரு மானே. சிவனது பேரொளி கிடைத்தபோது, அறிவு அல்லது அறியாமை எதுவுமில்லாத ஓர் இடத்தில் நான் இருந்துள்ளேன். அது பேரறிவு நிலையாகும் அங்கு துன்பம் இல்லை, இன்பமே உள்ளதாம். இது சத்திநிபாதம் வீழ்ந்தமையால் ஏற்பட்ட நிலையேயாம்.

இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன்என் நந்தி இணையடிக் கீழே.

-திருமந்திரம்.

திருமூலர் திருவாவடுதுறை படர் அரச மரத்தின்கீழ் அமர்ந்து திருமந்திரம் அருளிச் செய்வதற்கு சத்திதேவியின் சத்திநிபாத அருள்பெறுவதற்கு சத்திதேவியுடன் சேர்ந்த நிலையில் நான் யோக நிலையில் உறங்கிக்கொண்டு இருந்தபோது, மனோன்மணி ஆகிய அத் தேவியானவள்

*கஷ்டப்பட்டு உழையுங்கள். நீங்கள் உழைக்கும் எந்த உழைப்பும் வீணாவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வந்து ஒலிக்கின்ற வளையலை அணிந்த தனது கைகளால் என் கழுத்தை நன்றாகத் தழுவினாள். பின்னர் விளங்கும் ஒளியையுடைய தம்பலமாகிய அவளது சத்தியை என் வாயில் உமிழ்ந்து எனக்கோர் உபாயமும் சொல்லி அருளினாள். இவ்வுபாயம் சொல்லும்போது நான் விழித்துக்கொண்டேன். அப்பொழுது "ஐயா! உறங்கவேண்டாம். உறங்கியே காலம் கழிக்காதே" என்று உறக்கம் வராது இருக்கவும் வழியும் செய்தாள். அத் தேவி சொன்ன உபாயம் என்னவென்றால் அது இறைவனைச் சேர்வதற்குரிய வழியைக் கூறியதே. இவ்வாறு திருமூலர் அருளியுள்ளமை அவருக்குக் கிடைத்த சத்திநிபாத நிலையாகும். அந்நிலையே இங்கு நயம்படக் கூறப்பட்டுள்ளது. நயம்படக் கூறுதல் சித்தர்களின் மரபாகும்.

உறங்கும் அளவில் மனோன்மணி வந்து
கறங்கு வளைக்கை கழுத்து ஆரப் புல்லி
பிறங்கு ஒளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்டு
"உறங்கல் ஐயா" என்று உபாயம் செய்தாளே.

-திருமந்திரம்.

திருவாவடுதுறைத் தலத்தில் சத்தியானவள் பசு வடிவத்தில் வந்து சிவபெருமானை வழிபாடு செய்தாள். அவள் அங்குள்ள பக்குவர்களுக்கு உண்மையை உணர்த்துபவள். அவளே "வாகீசுவரி" எனப்படுகிறாள். நன்மைகளைக் கொடுக்கும் தேவியாகிய தேவர்களின் தலைவியாம் பராசத்திதேவி. அவள் இங்கு சிவமங்கை எனப்பட்டுள்ளாள். அவள் முத்தியை அளிப்பவள். அதனால் உயிர்கள் முத்தி பெறுவர். உயிர்களின் சஞ்சித வினைகளை நீக்கி அருள்பவள். அவளை அடைந்த எனக்கு வினை நீங்கமாட்டாதோ என திருமூலர் அருளியுள்ளார். வாகீசுவரி, பராசக்தி, சண்டிகை, புவனை, சிவகாமி எல்லாம் ஒருத்தியையே குறிப்பனவாம்.

ஆவின் கிழத்திநல் வாவடு தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடுந்
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி வினைகடிந் தானே.

-திருமந்திரம்.

உயிரை விளக்கமடையாமல் கட்டுப்படுத்தியிருந்த மலசத்திகள் அழிந்து அருளைப் பெருக்கும் சத்திகள் பதிதலுக்கு ஏற்ப அறிவு ஒளிரும். மூலாதாரத்தில் இருந்த குண்டலினி சத்தி அஞ்ஞானத்திலுள்ள ஆன்மாவுக்கு ஞானம் ஏற்பட அஞ்ஞானத்தை அகற்றிப் பசுவின் இயல்பையும் பதியின் இயல்பையும் அறியும்படி செய்து ஆசையை உண்டாக்கி உடன் இருந்தாள்.

இருட்டறை மூலை இருந்த கிழவி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே.

-திருமந்திரம்.

*நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சத்திநிபாதம் முதற்கண் நிகழுமாறு கூறப்பட்டது. இருட்டறை என்பது ஆணவ மலத்தையும், மூலையிலிருந்த என்பது தன் இயல்பு தோன்றாது மறைந்திருந்ததென் பதையும், கிழவி என்பது அநாதியான அருட்சத்தியையும், குருடு என்பது அஞ்ஞானத்தையும் கிழவன் என்பது ஆன்மாவையும், குணம்பல என்பது நிலையாமையுணர்வு, துறவுள்ளம் முதலியவற்றையும் மருட்டுதல் என்பது உலகியல் உணர்வில் ஓர் அதிர்ச்சியையுண்டாக்கு தலையும், மணம் புரிதல் என்பது ஆன்ம அறிவில் பதிதலையும் உணர்த்துவதாகவும் சிலர் கருத்துரை வழங்கியுள்ளனர். கிழவி என்பதை குமரி எனவும் சிலர் வழங்குவர். மேற்குறித்த திருமந்திரம் மந்தமான நிலையில் உள்ள மந்தம் எனப்படும். குண்டலினி சத்தியின் செயல் இங்கு கூறப்பட்டுள்ளது.

"மந்த தரம்" என்னும் நிலையில் குண்டலினி சத்தி குற்றத்தை நீக்கி, குணத்தை நல்கி ஞானம் விளங்கச் செய்தாள் குண்டலினி சத்தியின் ஓர் செயல் இதுவாகும். குண்டலினி சத்தி மேலே போய் ஆன்மாவின் பரப்பினைத் தன்னுள் அடக்கி ஆணவ மலத்தோடு மயங்கி யிருந்த நிலையைப் போக்கி கன்மங்கள் யாவற்றையும் விலக்கி, அறியாமையை அகற்றிச் சிவம் விளங்கக்கூடிய திருவருட் குணங்களைப் பதிவித்து, அருள்மயமான ஞானசத்தி விளங்குமாறு செய்தாள். இது "மந்த தரம்" என்னும் நிலையாகும். இதன் திருமந்திரம் வருமாறு,

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருள்திகழ் ஞான மது புரிந்தாளே.

-திருமந்திரம்.

மந்த தரம் பகுதியில் அதன் இன்னொரு திருமந்திரத்தை நோக்குவோம்.

கன்னித் துறைபடிந்தாடிய ஆடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடும் கருத்துண்டேல்
பின்னைப் பிறவி பிறிதில்லைத் தானே.

-திருமந்திரம்.

இங்கு "கன்னி" என்பது குண்டலினியைக் குறித்துள்ளது. முன்னம் பெண்ணுடன் பொருந்திக் குண்டலினியின் ஆற்றலில் விளங்கிய ஆடவர் அதை மாற்றி அமைக்கும் உபாயத்தை அறியவில்லை. அவ்வாறு அதை மாற்றி அமைக்கும் உபாயத்தை அறிந்தவர்க்கு, தொடர்ந்து வரும் பிறவித் துன்பம் இனிமேல் இல்லாமற் போகும். இதன் விளக்கம் ஆண் பெண் கூட்டுறவைத் தெய்வக் கூட்டுறவாக மாற்றியமைக்கும் ஆற்றல் பெற்றவர்க்குப் பிறப்பு இல்லை என்பது.

"தீவிரம்" பகுதியில் உள்ள திருமந்திரம் ஒன்றின் கருத்தினை நோக்கும்போது, அது தீவிர சத்திநிபாதத்தின் இயல்பு கூறியுள்ளது. முன் துன்பமாய் நின்ற நிலைமாறி இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமாக நிற்கும் நிலையில் சத்தி, ஏழேழ் பிறப்புக்களிலும் வருகின்ற பல பிறப்புக்களிலும் உள்ள துன்பங்களையெல்லாம் உணரச் செய்வாள். இதிலுள்ள உடலானது சிவபெருமானால் கட்டிக்கொடுக்கப்பட்ட ஓர் குடில் போன்றதாகும். இவ்வாறு ஏற்பட்ட உணர்ச்சி காரணமாக உயிரின் அகத்தேயுள்ள பல வகையான விருப்பு வெறுப்புக்களும் இல்லாமற் போக முதல் வனாகிய சிவபெருமானைக் கண்டு களிக்கும் களிப்பினையும் அவள் உருவாக்குவாள். இக் களிப்பினைச் "சிவக்கனியின் சுவை" எனவும் கூறுவர்.

அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் தோட்டத்தில்
எண் நிற்கும் ஏழ் ஏழ் பிறவி உணர்விக்கும்
உள் நிற்பது எல்லாம் ஒழிய, முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனி அது ஆமே.

-திருமந்திரம்.

தீவிரதரம் சத்திநிபாதம் அதிதீவிர தரம் என்றும் சொல்லப்படும். தீவிரதரம் சத்திநிபாத நிலையில் சம்பந்தப்பட்டோர் எல்லாம் சிவம் என்று இருப்பர். இது சத்திநிபாதத்தின் இயல்பு முற்றும் அடங்கிய நிலையாகும். இவர்கள் தமக்கென ஒரு செயல் அற்று இருப்பர். இரு வினையொப்புக் காலத்தில் இனிய அருட்சத்தி குருமண்டலத்தில் விளங்குவாள். இரு வினையொப்பாவது, நன்மையில் மகிழ்வும், தீமையில் வெறுப்பும் இல்லாது இருத்தல். குரு மண்டலத்தில் விளங்கிய அருட்சத்தி உயிர் ஒளி பெறுவதற்கு இடையூறான குணங்களைப் போக்கியருள்வாள் என்னும் அறிவினால் தன்முனைப்புச் செயல்கள் எதுவும் அற்று இருப்பின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் கெட்டுச்" சிவமாகத் திகழ்வான்.

இருவினை நேர் ஒப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும் எனும் ஞானத்தால் தன்செயல் அற்றால்
திரிமலம் தீர்ந்து, சிவன் அவன் ஆமே.

-திருமந்திரம்.

---

நல்லவை ஏதாவது நமது வாழ்வில் நடந்துவிட்டால், எனது அறிவுத் திறமையால்தான் அந்த வெற்றி கிட்டியது, என்னைப்போல் அறிவாளி யார் இருக்கிறார்கள். எனது சாமர்த்தியம் யாருக்கு வரும் என்றெல்லாம் மார்தட்டிக் கொள்கிறோம். சிறு பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டால் மட்டும் "கடவுள் கண் திறந்து பார்க்கவில்லையே, எத்தனையோ பூஜை புனஸ்காரங்கள் எல்லாம் செய்தேனே, கடவுள் கைவிட்டு விட்டாரே" என்றெல்லாம் புலம்புகின்றோம். சில சமயங்களில் சில தொல்லைகள் ஏற்படவே செய்யும். அவையெல்லாம் முற்பிறப்பில் செய்த பாவங்களால் இருக்கலாம் என்று உணரவேண்டுமே தவிர இதற்கெல்லாம் கடவுள்தான் காரணம் என்று தவறாக முடிவுகட்டக்கூடாது.

*ஒருபோதும் தவறு செய்யாதவன் எதையும் செய்யத் தகுதியுள்ளவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

*(தொடர்ச்சி...*

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## 06) அவைக்கு அஞ்சாத அரிவை - அம்மைச்சி

என்ன வீரம்! எத்துணை துணிவு! கற்றவர்கள் நிறைந்துள்ள கூட்டத்தில் இப்படியா கேட்பது!

கல்வியில் மிக்க புலமை வாய்ந்தவராயினும், "ஐயா! இப்போது இயம்பிய செய்யுளில் ஏதோ குற்றம் இருப்பதாக ஓர் ஐயம் தோன்றுகிறது. மீண்டும் அக் கவியைப் படிக்கச் சொல்லுங்கள்" என்று நயமாகக் கேட்பதன்றோ தகுதி? முறையும் அதுவேயல்லவா? அவ்வாறின்றி, பளீர் எனக் கன்னத்தில் அறைந்தாற்போல "கவிராயருக்கு மதியும் கெட்டதோ!" என்று கூறுவதென்றால், அதற்கு எவ்வளவு கல்விச் செருக்கும், அவைக்கு அஞ்சாத் தீரமும் தேவை. ஓர் பெண்பாலுக்கு!

அச் செய்யுளை இயற்றியவரோ இலக்கண இலக்கியக் களஞ்சியம் பிள்ளைத்தமிழ், கம்பகம், அந்தாதி, உலா, கோவை முதலிய பல நூல்கள் இயற்றிப் புகழ்பெற்றவர். கம்பர், காளமேகம் போன்ற புலவர் பெருமக்களின் வரிசையில் வைத்து மதிக்கத் தகுந்த மாண்பினை உடையவர். தமிழ்நாட்டில்

"கவி வீரராகவன் பாடிய நற்கவியேகவி;
அவனல்லாத பேர் கவி கற்கவியே"
"நாட்டுக்கு இலக்கியங் கவி வீரராகவன்
நற்கவியே"

என்று பலரும் புகழுமாறு சொல்லழகும் பொருட்பொலிவும் பொருந்தப் பாடவல்ல புலவர் அவரையே இவ்வாறு கூறுவது! மேலும் அந்தக் கவிவீரராகவர் பால் ஓர் தனிச்சிறப்புளது. அவர் பிறவிக்குருடர்.

"என்ன! மடியில் இருத்திக் கொஞ்சிக் குலாவிப் பாலருந்திய அருமை அன்னையின் அன்பு முகத்தையும் காணும் பேறும் பெறாத பிறவிக் குருடரா தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய பெரு நூல்களைக் கற்றுப் புலமை நிரம்பப் பெற்றார்? எவர்தாம் இதை நம்புவார்?" சிலருக்கு இவ்வாறு ஐயம் உண்டாகலாம். ஆம்; தம் நிலையோடு ஒப்பிட்டு நோக்குவார்க்கு ஐயம் தோன்றுவது இயல்பே. அடங்கா ஆர்வம், உள்ள உறுதி, தளரா ஊக்கம், விடாமுயற்சி, அஞ்சிக்கலங்காத்திடன் இவற்றை எய்தப்பெற்றோர்க்கு எந்தக் காரியமும் அரியதன்று.

"உழைப் பின் வாரா உறுதிகள் உளவோ?"
"அருமை உடைத்தென்று அசரவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

*எங்கு கூச்சல் அதிகமாக இருக்கின்றதோ அங்கு உண்மையான அறிவு இருப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனது சிறுமை நோக்கி இக்காரியம் செயற்கரியது" என்று கருதித் தளர்ச்சியுற வேண்டா; முயற்சியானது அதனைச் செய்து முடித்தற்குரிய பெருமையைத் தரும்" இவ்வியல்புகளோடு உள்ளத்தூய்மையும், நல்லொழுக்கமும், நுண்ணறிவும் வாய்க்கப்பெறின் எந்தக் காரியம்தான் கைகூடாது?

புறக்கண் இழக்கப்பெற்றவராயினும் அகக்கண் நன்கு விளங்கப்பெற்றவராயிருந்த கவிவீரராகவர் கல்வி பயின்ற விதமே வியக்கத்தக்கதாகும்.

தொண்டை நாட்டைச் சேர்ந்த செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பொற்களந்தையில் பிறந்தவர் அவர். ஏந்திய புகழ் வாய்ந்த புகழேந்தியார் தோன்றியதும் அவ்வூரே! தம் ஊர்ப் பள்ளியில், முதுகில் எழுதச்செய்து எழுத்துக்களையும், பிறர் பிடிக்கக் கேட்டல் வாயிலாகச் சிறுசிறு நூல்களையும் கற்று, மேலும் நூற் பயிற்சிக்காக அண்மையிலுள்ள காஞ்சிபுரத்திற்குச் சென்றார் அந்தகர் வீரராகவர். தாம் விரும்பிய காலத்தில் படிக்க கண்ணாக ஓர் மாணவனையும் உடன்கொண்டு சென்றார். தகுந்த ஆசிரியரையடுத்துப் பாடம்கேட்டு வந்தார். மீண்டும் மாணவனை வாசிக்கக்கேட்டு, கேட்டவற்றை விடாது உள்ளத்தில் அமர்த்திக்கொள்வதில் வல்லவராக இருந்தமையினால் அவருக்கு எல்லா நூல்களும் மனப்பாடமாயின. "வைத்ததொரு கல்வி மனப் பழக்கந் தானே"? கவி பாடவும் பழகினார். பெருங் காப்பியங்களையும் மிக எளிதில் பாடும் திறமையும் அவருக்கு உண்டாயிற்று. அந்தகர் ஒருவர் கல்வி கற்றமுறை மிக்க வேடிக்கையாயிருக்கவில்லையா? இதோ! இவ் உண்மையைக் காட்டும் வாக்கியங்கள்.

"ஏடாயிரங் கோடி எழுதாது தன் மனத்து
எழுதிப் படித்த வரிகள்
கவிவீரராகவன் விடுக்கும் ஓலை"

இதனைக் கூறியவர் அவரே.

"கவிவீரராகவன் கச்சிரிலே தன் நெஞ்சம் ஏடெனக்
கற்றானொருமுத் தமிழையுமே"

இது பிறர் கூற்று.

இன்னும் ஐயமா! "அந்தக் கவிவீரராகவர்" என்றே அவர் பெயர் வழங்கலாயிற்று.

அவர் செய்த நூல்கள் பல. சந்திரவாணன் கோவை என்பது அவற்றுள் ஒன்று. காஞ்சிபுரத்தில் அதனை அரங்கேற்றினார். கற்றோரும் மற்றோரும் குழுமியிருந்த அரங்கேற்ற அவையில் மாணாக்கன் ஒருவன் கையோடு பிடித்துக் கவிகளைப் படித்துவர, அவற்றின் பொருளைக் கூறிக்கொண்டிருந்தவர் கவிராயர். அப்போது,

"மாலே நிகராகும் சந்திர வாணன் வரையிடத்தே
பாலே பாயச் செந்தேன் மாரி பெய்ய நற்பாகு கற்கண்
டாலே பெருவிட முப்பழச் சேற்றி னமுதவயல்
மேலே முளைத்த கரும்போ இம் மங்கைக்கு மெய்யெங்குமே"

என்ற ஓர் செய்யுளை மாணவன் படித்தான். உடனே திடீரென்று "கவிராயருக்கு கண்தான் கெட்டது; மதியும் கெட்டதோ!" என்று மேலே குறிப்பிட்ட குரலொலி தோன்றியது.

*யார் நல்லொழுக்கத்தை விதைக்கின்றாரோ அவரே கௌரவத்தை அறுவடை செய்கிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணுக்குற்றார் புலவர். குறளின் ஒலியால் அவ்வாறு வினவியவர் ஓர் பெண் என்றுணர்ந்தனர். ஆம்; ஓர் அம்மையாரே அவர் சிறிது திகைத்தார். "யாவர் இவ்வாறு இயம்பியவர்?" என்றார் பெருமிதத்துடன் ஒலிபிறந்த திக்கை நோக்கி.

"எவ்வாறாயினும் ஏன்? அப்பாடலில் பிழை உளது. மற்றும் ஓர்முறை அதனைக் கூறுக" என்றனர். அவ்வம்மை, அஞ்சா நெஞ்சுடன் ஏடு பிடிப்போர் மீண்டும் அதனைப் படிக்கலாயினர். அதில் "எங்கே என்ன பிழை உளது? காண்போம்? எனக் கூர்ந்து பார்த்து வந்தனர் பாவலர்; மாணவர் படித்து முடிக்குமுன் தம் நுண்ணுணர்வால் பிழையை அறிந்து கொண்டார். "தம்பி! கொம்பை வெட்டிக் காலை நட்டுப் படி" என்றார். அவரும் ஆசிரியரின் குறிப்பை அறிந்துகொண்டு, அவ்வாறே செய்து கவியைப் படித்தார். புன்முறுவல் பூத்த முகத்தோடு, "பிழை நீங்கியது; பொருள் பொருத்தமுற்றது" என்று இன்சொல் இயம்பி அமர்ந்தார் அவ்வம்மையும்.

"இதென்ன ஒன்றும் விளங்கவில்லையே! விடுகதையாக அல்லவோ இருக்கிறது" என்று அங்கு கூடியிருந்தவர்கள் விம்மிதமுற்றுக் கவிவேந்தரை வினவினர். "முற்கூறிய பாட்டில் மூன்றாவது அடியில் "சேற்றில் முளைத்த கரும்போ" எனக் கூறப்பட்டுள்ளது. அது தவறு, ஏனெனில் கரும்பானது நல்ல விளைநிலத்து முளைப்பதாயினும் சேற்றில் முளைப்பதல்ல. ஆகலின் இங்கு "சேற்றில் முளைத்த கரும்போ" எனக் குறிப்பிட்டது என்னையுமறியாமல் நேர்ந்துவிட்ட குற்றம். ஒருமுறை படிக்கக்கேட்ட அளவில் அந்தப் பிழையைக் கண்டு அறிவுறுத்திய இம் மெல்லியலாரின் கல்வித்திறன் சாலப்போற்றத்தக்கதாகும்" எனப் பலவாறு புகழுரைகளால் அவ்வம்மையாரை வாழ்த்தினார் கவிப்புலவர். அங்கிருந்த அனைவரும் அவரது புலமையை வியந்து மெச்சினர். அந்த நாள் தொட்டுக் கல்விச் செல்வர்களாகிய அவ்விருவரும் பெரு நட்புக்கொண்டு கச்சியம்பதியில் வாழ்ந்து வந்தனர்.

அந்த அம்மையார்? அவர் பெயர் என்ன? இதுவரை அதை அறிந்துகொள்ளாமலே பேசிக்கொண்டிருக்கிறோமே! ஆம், "அம்மைச்சி" என்பது அப்பெண்மணியின் பெயர். காஞ்சிவாசி; தாசி வகுப்பினர். செந்தமிழ்ப் புலமைச் செல்வியாக விளங்கியவர். நன்னெறி தவறாத நங்கை. கல்விச் செருக்குடன் பிறரை மதியார் தன்மையும் உடையவர் என்று தெரிகிறது. அவரைப் பற்றிய வேறு வரலாறு ஒன்றும் அறியக்கிடக்கவில்லை.

அம்மைச்சியின் கல்வி மேம்பாட்டையும் தருக்கையும் கண்டு அவர்பால் அழுக்காறு கொண்டிருந்தனர். வரதராசப்பெருமான் கோயில் பார்ப்பனர் சிலர், தாழ்ந்தவராகத் தம்மால் எண்ணப்படுவோர் எவரேனும் சிறிது உயர்நிலை எய்தின், அது கண்டு பொறாது மனம் புழுங்குவதும், அவர்களுக்குக் கேடு சூழ முயல்வதும் இழிகுண மாந்தரின் இயல்பாகும் அல்லவா!

அம்மைச்சியின் வீடு பெரிய வீதியில் இருந்தது. எவ்வாறேனும் அவ்வீட்டை இடித்துத் தள்ளி அவரை அவ்விடத்தினின்றும் துரத்தல் வேண்டும் என்று முடிவு கட்டிய பொறாமையாளர், வரதராசர் திருவிழாக் காலத்தில் ஊர்வலம் வந்த பெரிய தேரைத் தம் சூழ்ச்சியால் அவ்வீட்டில் முட்டவிட்டனர். "காஞ்சிபுரம் தேர்" என்றால் சொல்லவா வேண்டும்! மிகவும்

*புரியாத விஷயத்தைப் புகழ்வது தப்பு. இகழ்வதோ அதைவிடப் பெரிய தப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரமானதும் அகலமும் உள்ள தேரை எங்கும் காணமுடியாது. (இப்போது காஞ்சி வரதராசர் தேரின் உயரம் குறைக்கப்பட்டுள்ளது)

"எடுங்கள் பிடியுங்கள்! வீட்டை இடிக்கவேண்டும்! என வழக்கமான ஆரவாரம். அதுகண்ட அம்மைச்சி செய்வதொன்றும் அறியாமல் கவிவீரராகவர் மாட்டுக்கூறி, அவர் அங்கு சென்று,

பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேப் பெருமா னேகச்சிச் செல்வரே - கோப்பாகக்
கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று வந்தீர் ஈது
அம்மைச்சி வாழும் அகம்.

பெருமாளே! பார்ப்பனராகிய படையோடு வந்தீரே. இலங்காபுரிக் கோட்டை என்று எண்ணியோ இதை இடிக்க வந்துவிட்டீர்! இல்லை! இல்லை இலங்கை கோட்டையல்ல இது, இஃது அம்மைச்சியின் வீடு" என்று வசைக்கவி ஒன்று பாடினார். அப்பாடலைக் கேட்டதும் அவர்கள் வெட்கித் தங்கள் எண்ணத்தைக் கைவிட்டுப் போயினர். அம்மைச்சியும் அகமகிழ்ச்சி கொண்டு இனிது இருந்தனர்.

பெரும்புலவர் பாட்டில் குற்றம் காணும் அளவிற்குத் தமிழ்நாட்டுப் பெண் மணிகள் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தனர் என்பதற்குச் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் இருந்த அம்மைச்சியின் வரலாறு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மாதர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய கல்வி, கடமை, உரிமை முதலியவற்றைத் தருவதற்கு செந்தமிழ் நாடு எக்காலத்திலும் மறுத்ததில்லை. உண்மை நாகரிகத்தைத் தன் வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்ட தமிழ்நாடு, மக்கள் தொகுதியின் ஒரு பகுதியினராகிய பெண்பாலார்க்கு, நாகரிகத்தின் கூறுபாடுகளாகவுள்ள கல்வி முதலியவற்றை அளிக்கமறுக்குமோ! மறுப்பின், அது நாகரிகநாடு என்னும் மதிப்புரைக்கு எங்ஙனம் உரியதாகும்?

"முற்காலத்தில் இந்நாட்டில் பெண்கள் கல்வியறிவற்றவர்களாகவே இருந்தனர். கல்வி கற்கவிடாமல் ஆண்மக்கள் அவர்களை தம்மிலும் தாழ்ந்தவர்களாகவே கருதி அடிமைகளைப் போல அடக்கி ஆண்டு வந்தனர்" எனப் பலர் இப்போது ஏளனமாகப் பேசுவர். அது சரியன்று. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தை முற்காலமெனவும், அதற்கு பிற்பட்ட காலத்தை இடைப்பட்ட காலமெனவும் கொண்டு இதனை ஆராய்தலே சரியானது ஆகும். அங்ஙனம் ஆராயின், அந்த இடைக்காலத்தில் அரசியல் மாறுதல்களால் நிகழ்ந்த குழப்பங்களின் காரணமாக, மாதர் அச்சமின்றி வெளியில் செல்லமுடியாத நிலைமையும், மாந்தர் ஓரிடத் திலேனும் நிலைத்த வாழ்க்கையராகாமல் இடம்விட்டு இடம்மாறும் நாடோடிகளாக அலையத்தக்க நிலைமையும் நேர்ந்தமையின் இக் குறைபாடுகள் விலக்க இயலாதனவாயின என்பது தெளிவாகும். ஆகவே தமிழ்நாட்டில் ஆண்களைப்போல, பெண்களும் கல்வியும் சுதந்திரமும் உரிமையும் வீரமும் உடையவர்களாக முற்காலத்தில் திகழ்ந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை என்று கொள்வதே ஏற்புடையதாகும். ஏன்? இன்னும் பெண்டிரை ஆடவர் தம்மிலும் உயர்ந்தோராக மதித்து வந்தனர் என்றும், குடும்பங்களில் மாதர்கள் முடிசூடா அரசிகளாக விளங்கினர் என்றும் கூறுவதே தமிழ்நாட்டுப் பெண்களின் முற்காலத்து உண்மை நிலையைக் குறிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல, அம்மைச்சியின் வரலாறு அமைந்துள்ளது.

காஞ்சிபுரத்தில் வரதராசப்பெருமாள் வரலாற்றில் இவ் அம்மையாரின் வரலாற்றுச் சருக்கம் காணப்படுகிறது. அம்மையார் வரதராசப் பெருமாள்மீது பாடல்களைப் பாடியுள்ளார். அவை சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றன. தமிழர் நமது கல்விச்சொத்துக்கள் பலவற்றை காப்பாற்றத் தவறியிருக்கிறோம். அந்தவகையில் அம்மைச்சியின் கவிகளும் அடங்கும். இருப்பினும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பாடல்கள் உண்டு. (தொடரும்...

## அருள் மழையில் களித்திடுவோம்!

*வேல் வடிவில் வீற்றிருந்து,*
*வேண்டும் அருள் வழங்க,*
*வேலவன் வந்து உறைந்த இடம்*
*செல்வச் சந்நிதி! - திரு*
*மால் மருகன் மனங்கனிந்து,*
*மன்றாடித் துதிப்போர்க்கு,*
*மயிலேறி வந்தருளும்,*
*அழகான திருப்பதி!*

*ஆற்றங் கரையினிலே*
*அண்டி வரும் தொண்டருக்கு,*
*ஆறுதலைத் தருவான்*
*ஆறு முகன்!*
*போற்றித் துதிப்போரின்*
*பொல்லா வினைகளினைப்*
*போக்கிடுவான் உமை*
*அம்மை மகன்!*

*அன்னதானக் கந்தன் என*
*அகிலமும் அறிந்தவனோ*
*அல்லல்கள் போக்கியெமை*
*ஆண்டு அருள்வான்!*
*இன்னருளைத் தந்திடும்*
*இனிய சண்முகனோ*
*எழில் முகத்தைக் காட்டித்*
*தரிசனம் தந்திடுவான்!*

*வள்ளல் அவன் திருவடியை*
*வாழ்த்தி வணங்கிட,*
*வந்தவன் திருத்தலத்தில்*
*நாம் கூடுவோம்!*
*தெளு தமிழில் அவனின்*
*திருப் புகழைப் பாடியுமே,*
*தேவனின் அருள் மழையில்*
*நனைந்தே களித்திடுவோம்!*

*- சி. சிவசேகரன்,*

*ஆயிரம் மைல்களுக்கு அப்பாலான பயணம் நாம் வைக்கும் ஒரு அடியில்தான் தொடருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப்பணிகள்

## [01.01.2023 தொடக்கம் 30.06.2023 வரை]

– தொகுப்பு: *சந்நிதியான் ஆச்சிரமம்* –

***01.01.2023 ஞாயிறு***

ஆச்சிரமத்தில் இடம்பெற்ற ஆறுமுகநாவலரின் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவில் தரம் 01 தொடக்கம் தரம் 12 வரையிலான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

***04.01.2023 புதன்***

1) திருகோணமலை மாவட்டம் - சாம்பல்தீவு பிரதேசத்தில் உள்ள இலுப்பைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மண்கிண்டி மலை ஸ்ரீ முருகன் ஆலய கட்டிட பணிக்கு 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

2) வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய கட்டிட பணிக்காக 50,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

***08.01.2023 ஞாயிறு***

1) திருவாசக விழாவை முன்னிட்டு ஆச்சிரமத்தில் வைத்து தரம் 01 தொடக்கம் 12 வரையான 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

2) கற்பெலி கிழக்கு, மிருசுவில் பிரதேசத்தைச் சேர்ந்த யா/ மீசாலை வீரசிங்க மத்திய கல்லூரியில் தரம் 12இல் கல்விகற்கும் மாணவனுக்கும், அளவெட்டி தெற்கு, அளவெட்டியைச் சேர்ந்த யா/ அருணோதயாக் கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவனுக்கும் துவிச்சக்கரவண்டிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

3) மூளாயைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

***09.01.2023 திங்கள்***

ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு 752,000. 00 ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரில் சென்று கையளிக்கப்பட்டது.

*உங்களை நீங்கள் அடக்கி ஆழ்வதே உண்மையான வலிமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*20.01.2023 வெள்ளி*

உடையார்கட்டு முல்லை ஸ்டார் இசைக் கலாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக உடையார்கட்டில் வசிக்கும் முதியோர்களைக் கௌரவிப்பதற்காக 40,000. 00 ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது.

*24.01.2023 செவ்வாய்*

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியாசலைக்கு 756,000. 00 ரூபா பெறுமதியான மருந்துப்பொருட்கள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டது.

*29.01.2023 ஞாயிறு*

அல்வாய் கிழக்கு, அத்தாய் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10இல் கல்வி கற்கும் மாணவனுக்கும், புத்தூர் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவிக்கும், நீர்வேலியைச் சேர்ந்த தரம் 05இல் கல்வி கற்கும் மாணவனுக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*30.01.2023 திங்கள்*

வவுனியா மாவட்டம் சமயபுரம், கணேசபுரம் பிரதேசங்களைச் சேர்ந்த வ/ சைவப்பிரகாச மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இரு மாணவர்களுக்கு வேணி அரிசி ஆலையில் வைத்து கு. கங்கைவேணியன் அவர்களினால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*01.02.2023 புதன்*

பெரிய பண்டிவிரிச்சான், மடுவைச் சேர்ந்த யோகேஸ்வரி என்பவர்க்கு 15,000. 00 ரூபா நிதி அந்தியேட்டி நிகழ்வுக்காக வழங்கப்பட்டது.

*03.02.2023 வெள்ளி*

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வை குறைந்த சின்னராசா என்பவருக்கு மூக்குக் கண்ணாடி ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

*09.02.2023 வியாழன்*

மட்டக்களப்பு ஆதீனத்துக்கு சிவராத்திரி நிகழ்வுக்காக 35,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

*10.02.2023 வெள்ளி*

10 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

யா/ வலி/ ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையில் கல்விகற்கின்ற இரண்டு மாணவர்களுக்கும், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற புலமை பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கும், கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாணவிகளுக்கும், புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த தரம் 07இல் கல்வி கற்கும் மாணவிக்கும், கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த இரண்டு மாணவிகளுக்கும், குரவில் தெற்கு, உடையார்கட்டை சேர்ந்த மாணவனுக்கும், கெருடாவில் தெற்கு, தொண்டைமானாற்றை சேர்ந்த மாணவனுக்கும் துவிச்சக்கரவண்டிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டன.

***13.02.2023 திங்கள்***

1) கிளிநொச்சி மாவட்டம் பொது வைத்தியசாலைக்கு 776,650. 00 ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டது.

2) கேப்பாப்பிலவு மாதிரி கிராம மக்களின் குடிநீர் தேவைக்கான கோரிக்கைக்கு அமைவாக 340,000. 00 ரூபா பெறுமதியான ஆழ்துளைக்கிணறு அமைக்கப்பட்டது.

***12.02.2023 ஞாயிறு***

புலோலி கிழக்கு, புலோலியைச் சேர்ந்த ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக தேர் இழுப்பதற்கான வடம் கொள்வனவுக்காக 20000. 00 ரூபா நிதி ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

***15.02.2023 புதன்***

நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள கற்பகா அறநெறிப் பாடசாலையின் 5ஆம் வருட நிறைவு விழாவில் மாணவர்களுக்கு 85,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

***17.02.2023 வெள்ளி***

1) கரவெட்டி கிழக்கு, கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு அந்தியேட்டி நிகழ்வுக்காக 20,000. 00 ரூபா நிதி ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

2) கொற்றாவத்தை அருள்மிகு உப்புக்கிணற்றடி அம்மன் ஆலய நிர்வாக சபையினரிடம் கரணவாய் வடக்கில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு 200,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

***20.02.2023 திங்கள்***

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு 770,540. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான மருந்து வகைகள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டன.

***24.02.2023 வெள்ளி***

1) மிருசுவில் அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவில் திருப்பணிக்காக விக்கிரகங்கள் கொள்வனவுக்கு 50,000. 00 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையில் இடம்பெறும் நடனமயில் போட்டிக்காக 03.02.2023 அன்று 01ஆம் கட்டமாக 50,000. 00 ரூபாவும் 02ஆம் கட்டமாக 50,000. 00 ரூபாவுமாக 100,000. 00 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

03) 07 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டது.

01) 3ஆம் சந்தி, கெருடாவிலைச் சேர்ந்த சசீகரன் றொக்சிகா
(தரம் - 10, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)

02) கலைமதி வீதி, புத்தூர் மேற்கு புத்தூரைச் சேர்ந்த சதீஸ்வரன் அர்ணிகா
(தரம் - 06, யா புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி)

03) கலைமதி வீதி, புத்தூர் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த பாஸ்கரன் ஷயானா
(தரம் - 10)

04) கலைமதி வீதி, புத்தூர்மேற்கு, புத்தூரைச் சேர்ந்த செல்வரத்தினம் றகிந்தன்
(உயர்தரம், யா ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி)

05) சுதாகரன் றதீஸ்
(புலமை பரீட்சை சித்தி, யா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

06) குணசீலன் அக்ஷிகன்
(புலமை பரீட்சை சித்தி, யா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

07) சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டியைச் சேர்ந்த வ. கனிநிலவன்
(உயர்தரம், யா மத்திய கல்லூரி)

***27.02.2023 திங்கள்***

01) வவுனியா, கோதண்டர் நொச்சிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கந்தசுவாமி ஆலய கட்டிட பணிக்காக 50,000. 00 ரூபா நிதி நிர்வாகத்தினரிடம் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

02) திருகோணமலை, மூதூர் வெருகல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தி/ மூ/ வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தின் சரஸ்வதி ஆலய கட்டுமானத்திற்காக 100,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

***08.03.2023 புதன்***

01) மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவின் அந்தோணியபுரம் கிராமத்தில் வசிக்கின்ற இடுப்புக்குக் கீழே செயல் அற்ற செ. ஆரோக்கியம்மா என்பவர்க்கு 25,000. 00 ரூபா நிதியும், சத்துமாப் பைக்கற்றுக்கள், பால்மா பைக்கற்றுக்கள் என்பன நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

02) மன்னார், மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள பண்டிவிரிச்சான் பிரதேசத்தில் வசிக்கின்ற இடுப்புக்குக் கீழே செயல் அற்ற பத்மராசா றோயல் கத்தரீனா என்பவர்க்கு 25,000. 00 ரூபா நிதியும், சத்துமா பைக்கற்றுக்களும் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

*நேற்றும் இன்றும் கதையாகக் கழிந்துவிட்டன. நாளை உதயமாவதை எதிர்பார்த்திருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*16.03.2023 வியாழன்*

01) கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு 500,798. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான மருந்து வகைகள் வைத்தியசாலை அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டது.

02) கரணவாய் தாமோதரா வித்தியாலயத்துக்கு 280,000. 00 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

*17.03.2023 வெள்ளி*

1) கரவெட்டி கிழக்கு, காட்டுப்புலம் பிரதேசத்தில் அமைந்துள்ள விஷக்கடி வைத்தியர் சரவணன் அவர்களின் காளிகோயில் கட்டிட பணிக்காக 50,000. 00 ரூபா நிதி ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

2) கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயைச் சேர்ந்த விசேட தேவைப்பாடுடைய குடும்பத்தினருக்கு வீடு கட்டுமானப்பணிக்காக 100,000. 00 ரூபா ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

3) கரணவாய் கிழக்கு, குருக்கள் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தின் சுயதொழிலுக்காக 100,000. 00 ரூபா ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

*19.03.2023 ஞாயிறு*

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு 842,000. 00 ரூபா பெறுமதியான காண்டாமணி வழங்கப்பட்டது.

*22.03.2023 புதன்*

கிளிநொச்சி - பொன்னகர் பிரதேசத்தில் வசிக்கின்ற விசேட தேவைப்பாடுடைய குடும்பத்திற்கு சமையலறை கட்டுமானத்திற்காக 02ஆம் கட்டமாக 15,000. 00 ரூபா வழங்கப்பட்டது.

*23.03.2023 வியாழன்*

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு 360,000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான மருந்துவகைகள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரில் சென்று கையளிக்கப்பட்டது.

*29.03.2023 புதன்*

தெல்லிப்பளை - தந்தை செல்வா தொடக்கநிலை பள்ளிக்கு 75,000. 00 ரூபா பெறுமதியான புத்தகங்கள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

*30.03.2023 வியாழன்*

மாகாண மருந்து உற்பத்தி பிரிவு சுதேச மருத்துவ திணைக்களம் - அச்சுவேலி 92,000. 00 ரூபா பெறுமதியான பொதியிடல் இயந்திரம் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

*மூளையில் பலமிருப்பவன் மௌனமாக இருந்தால் அதில் ஏதோ விபரம் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31.03.2023 வெள்ளி**

07 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

01) தொண்டைமானாற்றைச் சேர்ந்த இராமச்சந்திரன் முருகதாஸ்
02) சொக்கத்திடல், புத்தூரைச் சேர்ந்த ரஜிந்தன் கோமிதா
03) அம்பாள் நகர், கிளிநொச்சியைச் சேர்ந்த கோபாலப்பிள்ளை விஜிதா
04) கொம்பனிப்புலம், மாசியப்பிட்டியை சேர்ந்த கஜேந்திரன் மகேஸ்வரி
05) புத்தூர் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த கி. அனுசாலினி
06) அச்செழுவைச் சேர்ந்த அச்செழு இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி
07) புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த தனேஸ் கிசானி என்பவர்களுக்கு ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

**04.04.2023 செவ்வாய்**

01) வவுனியா - புதுக்குளம், கண்ணாடிக் கணேசபுரத்தை சேர்ந்த தரம் 08 மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

02) வவுனியா குருக்கள் புதுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 70,000. 00 ரூபா பெறுமதியான தளபாடங்கள் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

03) வவுனியா சமயபுரம் பிரதேசத்தில் உள்ள 60 மாணவர்களுக்கு 90,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
(பாலர் பிரிவு தொடக்கம் சாதாரண தரம் வரை)

04) கொடிகாமம் - வல்லி கந்தசாமி தேவஸ்தானத்திற்கு கட்டிட பணிக்கு 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**05.04.2023 புதன்**

காரைநகர் வல்லியப்பா ஆலயத்துக்கு கட்டிட பணிக்காக 200,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**21.04.2023 வெள்ளி**

01) அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த சிவம் ஆதவன் என்பவர்க்கு மருத்துவ தேவைக்காக 25,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) கெருடாவில் தெற்கு, தொண்டைமானாற்றைச் சேர்ந்த விவேகானந்தா முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுக்காக 38 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், உணவுப் பெட்டியும் வழங்கப்பட்டன.

**26.04.2023 புதன்**

01) மானிப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு 562,750. 00 ரூபா பெறுமதியான அத்தியவசியமான மருந்துவகைகள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டது.

*ஒவ்வொரு பிரச்சினைக்கு உள்ளேயும் ஒரு வாய்ப்பு உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) ஊரியம்பதி, களபூமி காரைநகரைச் சேர்ந்த ஸ்ரீ பழநிவேல் முருகப்பெருமான் ஆலயத்துக்கு கட்டிட கட்டுமானப்பணிக்காக 150,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

***28.04.2023 வெள்ளி***

04 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) கிளிநொச்சி பொன்னகர் மத்தியைச் சேர்ந்த இ. செபஸ்ரியன் பீற்றர்
02) கிளிநொச்சி, பொன்னகர் மத்தியைச் சேர்ந்த கஜேந்திரன் நாகராணி
03) கிளிநொச்சி, பொன்னகர் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி உதயகுமார்
04) உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டைச் சேர்ந்த அழகு சர்மிளா

***29.04.2023 சனி***

கம்பர்மலை வித்தியாலய மாணவர்களுக்கு 295,000. 00 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

***12.05.2023 வெள்ளி***

01) கிளிநொச்சி - திருநெறிக் கழகத்தினருக்கு கிராமப்புற அறநெறிப்பாடசாலைகளை வலுப்படுத்துவதற்காக 100,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) கல்லுண்டாய், நவாலி கிழக்கை சேர்ந்த மாணவிக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

03) வவுனியா - ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பத்திற்கு மருத்துவ உதவிக்காக 10,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

***13.05.2023 சனி***

கதிர்காம பாதயாத்திரையினரை முல்லைத்தீவு மாமூலையில் உள்ள கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் நேரடியாகச் சென்று சந்தித்து 210,000. 00 ரூபா பெறுமதியான உணவுப்பொதிகள் 70பேருக்கு வழங்கப்பட்டன.

***21.05.2023 ஞாயிறு***

ஹப்புத்தளை - தொட்டுலாகலை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் கட்டிட பணிக்காக 100,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

***23.05.2023 செவ்வாய்***

கதிர்காம பாதயாத்திரையினருக்கு திருகோணமலை, மூதூர் பட்டியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் வைத்து 210,000. 00 ரூபா பெறுமதியான உணவுப்பொதிகளும். ஒரு தொகை நிதியும் 70பேருக்கும் வழங்கப்பட்டன.

*நீங்கள் தோல்வியைத் தவிர்க்கின்றீர்கள் என்றால், வெற்றியையும் தவிர்க்கின்றீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***26.05.2023 வெள்ளி***

04 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) கிளிநொச்சி பொன்னகர் மத்தி கிராமத்தைச் சேர்ந்த திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம்- 07இல் கல்விகற்கும் மாணவன்

02) உடுப்பிட்டி - இமையாணன் மேற்கு கிராமத்தில் வசிக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன்.

03) யாழ்ப்பாணம் நல்லூரில் வசிக்கும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன்

04) கரவெட்டி பிரதேசம், கரவெட்டியைச் சேர்ந்த மாணவன் ஆகியோருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

05) கண்பார்வை குறைந்த அல்வாய் கிழக்கு அத்தாய் பிரதேசத்தைச் சேர்ந்தவருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டது.

***30.05.2023 செவ்வாய்***

01) வவுனியா - அனந்தர் புளியங்குளம், சின்னப் பூவரசங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், ஸ்ரீ நாக கண்ணகையம்மன் ஆலயங்களின் கட்டிடப் பணிக்காக 100,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

02) முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு மலசலகூட திருத்தவேலைக்கு 50,000. 00 ரூபா நிதியும் மின் இணைப்பிற்கு 30,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

03) கிளிநொச்சி உமையாள்புரம் உமாமகேஸ்வரர் தேவஸ்தானத்தின் கட்டிடப் பணிக்காக 02ஆம் கட்டமாக 50,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

***02.06.2023 வெள்ளி***

06 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) சுழிபுரம், பொன்னாலை தெற்கு கிராமத்தைச் சேர்ந்த மாணவன்
02) வவுனியா கோதண்டர் நொச்சிக்குளத்தை சேர்ந்த இரண்டு மாணவர்கள்
03) கிளிநொச்சி பொன்னகர் மத்தியைச் சேர்ந்த மாணவன்
04) புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த மாணவன்
05) தொண்டைமானாறு, அக்கரை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன்

அச்சுவேலி, பத்தைமேனி பிரதேசத்தில் உள்ள இலகடிப்பதி முருகன் ஆலய கட்டிட பணிக்காக 200,000. 00 ரூபா நிதி ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

***கவலையைத் தூரத்து. எப்போதும் உயர்ந்த எண்ணங்களோடு இரு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*03.06.2023 சனி*

கதிர்காம பாதயாத்திரையினருக்கு அம்பாறை, காரைதீவு பிரதேசத்தில் அமைந்துள்ள நந்தவன பிள்ளையார் ஆலயத்தில் வைத்து உணவுப் பொதிகளும் ஒருதொகை நிதியும் வழங்கப்பட்டன.

*07.06.2023 புதன்*

தேசிய இளைஞர் சேவை மன்றம் யாழ்ப்பாணம் அலுவலகத்திற்கு 175,000. 00 ரூபா பெறுமதியில் குழாய்க்கிணறு அமைத்துக்கொடுக்கப்பட்டது.

*09.06.2023 வெள்ளி*

01) கலைமதிவீதி, புத்தூர் மேற்கு கிராமத்தைச் சேர்ந்த யா ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன்

02) ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த யா இராமநாதன் கல்லூரியில் தரம்-09இல் கல்வி கற்கும் மாணவி

இருவருக்கும் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*12.06.2023 திங்கள்*

கதிர்காம பாதயாத்திரையினருக்கு உகந்தை குமண தேசிய பூங்கா ஊடாக செல்பவர்களுக்கு 715,000. 00 ரூபா நிதிப் பங்களிப்பில் உணவுப்பொதிகளும், குடிநீர் விநியோகமும் நேரடியாகச் சென்று மேற்கொள்ளப்பட்டது.

*18.06.2023 ஞாயிறு*

01) பூனாகலை - கபரகலை கிராமத்தில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மாணவர்களிற்கு 200,000. 00 ரூபா பெறுமதியான பாடசாலை சீருடைகள் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டன.

02) பதுளை - மலையக சிறுவர் இல்ல பராமரிப்பில் கல்வி கற்று பல்கலைக் கழகத்துக்கு தெரிவான இரண்டு மாணவிகளுக்கு மடிக் கணினிகள் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டன.

*21.06.2023 புதன்*

01) திருகோணமலை - செல்வநாயகபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு 505,400. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் வைத்திய அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று கையளிக்கப்பட்டன.

02) வவுனியா கல்லாறு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயத்துக்கு குடிநீர் வசதியின்மையால் 440,520. 00 ரூபா நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

*இன்றைய உங்கள் சிறு முடிவு நாளைய அனைத்தையும் மாற்ற முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*23.06.2023 வெள்ளி*

01) புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் தரம் - 10இல் கல்வி கற்கும் மாணவிக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

02) தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளி மாணவர்களுக்கு குடிநீர் பாவனைக்காக 55,000. 00 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

திருகோணமலை - செல்வநாயகபுரம், உதயபுரி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை கட்டிடப் பணிக்காக

27.02.2023 - 50,000. 00
22.03.2023 - 100,000. 00
12.05.2023 - 100,000. 00
21.06.2023 - 100,000. 00

என நான்கு கட்டங்களாக 350,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள நவமங்கை நிர்வாகம் இலவச கல்வி வகுப்புக்காக ஆசிரியர்களின் கொடுப்பனவுக்கு

21.04.2023 - 50,000. 00
20.05.2023 - 50,000. 00
20.06.2023 - 50,000. 00

என மூன்று கட்டங்களாக 150,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

மாங்குளம், பனிக்கங்குளம் கிராமத்தைச் சேர்ந்த தர்மப்பிரியா என்பவரின் வீடு திருத்தவேலைக்காக

27.02.2023 - 50,000. 00
08.03.2023 - 75,000. 00
22.03.2023 - 75,000. 00

என மூன்று கட்டங்களாக 200,000. 00 ரூபா நிதி நேரடியாகச் சென்று வழங்கப்பட்டது.

திருகோணமலை - மூதூர், வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் சரஸ்வதி ஆலய கட்டுமான பணிக்காக,

27.02.2023 - 100,000. 00
22.03.2023 - 100,000. 00

என இரு கட்டங்களாக 200,000. 00 ரூபா நிதி வழங்கப்பட்டது.

*உடம்பில் பலமிருப்பவன் ஆவேசப்பட்டால் அடிதடி நடக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

04.08.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "முருகனின் அற்புதம்"

வழங்குபவர் :- திரு சி. பாலமுரளி அவர்கள்

[ஆசிரியர்]

---

11.08.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

18.08.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

25.08.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஆவணி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்கள்

[ஆசிரியர்]

308 ஆவது மலர்

மதிப்பீட்டுரை :- திரு இரா. ஸ்ரீநடராஜா அவர்கள்

[இளை. அதிபர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org